இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 28, 07 ஜனவரி 2022 இதழ்:- 37

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Super Visa Insurance
Dir: 416 528 1407
www.gtbrokers.ca

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி!
## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# மஹிந்தாவை திருப்பதிக்கு அழைத்துச் சென்ற விமான உரிமையாளர் கணநாதன் என்ற தமிழர் யார்?

ராஜபக்ஷக்களின் ஒவ்வொரு அசைவும் இப்போது தீவிர ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டுள்ளது. இந்நாட்டு அரசியல் தலைவர்களும் தொழிலதிபர்களும் இந்தியாவில் திருப்பதிக்கு சென்று தராசில் அமர்ந்து தங்கள் எடைக்கு தகுந்த நேர்த்தி கடன் செய்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக மகிந்த ராஜபக்ஷா திருப்பதிக்கு சென்றால் மக்கள் சிந்திக்கவும் செய்கிறார்கள். (8ம் பக்கம் பார்க்க)



## தமிழர் மூலம் சீனாவுக்கு செக்


நாலடியாரில் ஒரு கூற்றுண்டு. அதாவது கழிந்து செல்லும் நாட்கள் அனைத்தும் உனது வாழ்நாளாகும். நமது அரசியலுக்கும் இது பொருந்துமா? ஏனெனில் ஒரு அரசியல் போராட்டத்தில் போராட்டத்தில் ஆண்டுகள் கழிகின்ற போது அந்த (7ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

## ஐ.நா.வில் கைலாசா:- மோடியைச் சீண்டும் நித்தியானந்தா



ஐ.நாவில் நித்தியானந்தா முன் வைத்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டு புதியதல்ல. பல்வேறு வழக்குகள் காரண மாக வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற நித்தியானந்தா கைலாசா என்கிற தேசத்தை(9ம் பக்கம் பார்க்க)

## 2022இல் ஈழத்தமிழர் அரசியல்?

நாலடியாரில் ஒரு கூற்று ண்டு. அதாவது கழி ந்து செல்லும் நாட்கள் அனைத்தும் உனது வாழ்நாளாகும். நமது (7ம் பக்கம் பார்க்க)



இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

# இந்தியப் பிரதமருக்கான கடிதம்! வடக்கு -கிழக்கு தமிழ்கட்சிகள் மட்டும் கையொப்பமிட்டு அனுப்பத் திட்டம்!

3ம் பக்கத்தில் முழுமையான செய்தி

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
RE/MAX
MORTGAGE ALLIANCE

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com




HOMELIFE HIGHER STANDARDS


HomeLife Today Realty Ltd.,
Brokerage INDEPENDENTLY OWNED AND OPERATED
Bus: 416.298.3200
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Keele/Finch

Toronto $499,900
Bedrooms: 2 Washrooms: 1
York University And New Lrt Line

### Driftwood/Finch

Toronto $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Fully Renovated, Brand New Kitchen

### Markham/Ellesmere


Scarborough $1,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Layout

### Don Mills/Sheppard


Scarborough $2,200
Bedrooms: 1+1 Washrooms: 2
615Sqft+176 Sqft, Open Concept

### Hwy 401/ Weston Rd

Toronto $799,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Beautifully Renovated Home

### Salem & Rossland Rd

Ajax $1,059,000
Bedrooms: 4 Washrooms: 3
Potential Sep.Entrance For Basement.

### Grandview /Woodstream

Oshawa $1,549,900
Bedrooms: 4 Washrooms: 4
Over 3,322 Sq Ft, Open Concept

### Midland Ave & Danforth

Scarborough Call for Price
Bedrooms: 3+1 Washrooms: 3
Totally Renovated In 2017




YOU'RE INVITED TO THE fourme VIP PREVIEW EVENT

GET PRIORITY ACCESS TO THE MOST ANTICIPATED RELEASE OF 2021

BRAND NEW RELEASE
STARTING IN THE 500s
EXTENDED DEPOSIT STRUCTURE • ASSIGNMENT
CAPPED DEVELOPMENT FEES • LEASE DURING OCCUPANCY

1151 MARKHAM RD
FOURME SALES CENTRE
SUNDAY NOV 21ST / 10A-6P

TO RSVP, EMAIL, DM OR CALL ME

### Birchmount /Ellesmere

Scarborough Call for Price
Bedrooms: 2 Washrooms: 2
Renovated With High Quality


### Midland/Eglinton

Scarborough $419,000
Bedrooms: 3 Washrooms: 2
Bright Unit With A Balcony

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## கியூபாவிற்கான சுற்றுலா

கனடாவிலிருந்து குளிர்காலச் சுற்றுலாவுக்காக உங்களை பாதுகாப்பாக
கியூபாவுக்கு அழைத்துச் செல்கின்றோம்.
உங்கள் விமானச் செலவு, தங்குமிட வசதிகள் உட்பட அனைத்துச் செலவு (Pakcage)
உடன் மேலதிகமாக 400.00 டொலர்கள் மட்டுமே!
இத்தொகையில் ஊர்க்கோழி, ஆட்டுக்கறி, கடலுணவு வகைகள், நமது முறைப்படி சமைத்து
நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கே கொண்டு வந்து தருவதுடன் குதிரைச் சவாரி,
5க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்களையும் பார்வையிடலாம்.

முதியோருக்கான விசேட கவனிப்பு

மேலதிக விபரங்கட்கு - தவா
647.469.9839/647.333.0098

04 ஜனவரி 2022, 25 ஏப்ரல் 2022 இரண்டு சுற்றுலா குழ புறப்படுகின்றது. பதிவு செய்து கொள்ளுங்கள்


### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 JAFFNA SUPER STORES**
**1221 MARKHAM RD - 14**
**(MARKHAM / EELESMERE)**

**3 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**4 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**5 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**6 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

### மொன்றியல் தொடர்புகளுக்கு
### மார்சே துர்க்கா
### (514) 276 9262

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# இந்தியப் பிரதமருக்கான கடிதம்

# வடக்கு -கிழக்கு தமிழ்கட்சிகள் மட்டும் கையொப்பமிட்டு அனுப்பத் திட்டம்!

(யாழ்ப்பாணம் 05 ஜனவரி 2022)

இந்தியப் பிரதமருக்கு தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைந்து அனுப்பவிருந்த கடிதத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் மாத்திரம் கையொப்பமிட்டு அனுப்புவது என்று ஏற்பாட்டு கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று நம்பகரமாக தெரிய வருகின்றது

இந்த நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரை சந்தித்த பின்னர் தமிழ்பேசும் கட்சிகளை ஒருங்கிணைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் அறிவிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமரை கோரும் நோக்கில் கடந்த நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் 7 கட்சிகள் சந்தித்துப் பேசின. இந்தக் கூட்டத்தில் ஆரம்பத்தில் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்கவில்லை. எனினும், பின்னர் நடந்த கூட்டங்களில் தமிழ் அரசுக் கட்சியும் பங்கேற்றது.

இறுதியாக 11 கட்சிகள் கொழும்பில் கூடி வரைவு ஒன்றைத் தயாரித்தன. அந்த வரைவின் விடயங்களுடன் குறிப்பாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் விடயத்துடன் ஒன்றுபட முஸ்லிம் கட்சிகள் பின்னடித்த நிலையில் தொடர்ந்து வேறு காரணங்களை காட்டி மனோ கணேசன் தலைமையிலான தமிழர் முற்போக்கு கூட்டணியும் இழுபறிப் பட்டது.

இதைத் தொடர்ந்து சில கட்சிகள் கூடி சந்தித்து நடத்திய கலந்துரையாடல்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன. அத்துடன் புதிய நகல் ஒன்றும் தயாரிக்கப் பட்டது. ஆனால் அவற்றை தமிழ் அரசுக்கட்சி நிராகரித்த நிலையில் இப்போது 21ஆம் திகதி தயாரித்த கூட்டு வரைவில் கையொப்பமிடத் தமிழ் கட்சிகள் திட்டமிட்டுள்ளன. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தையும், அதன் விளைவாக வந்த 13ஆம் திரு த்தச் சட்டத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோருவதில் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ் கட்சிகள் ஓரணியில் நிற்கின்றன. இதனால், மலையக, முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களை நேரில் சந்தித்துப் பேசி அவர்களுக்கு நிலைமையை விளக்கிய பின்னர் வடக்கு, கிழக்கை சேர்ந்த தமிழ்க் கட்சிகள் மட்டும் இந்தியப் பிரதமருக்கான கடிதத்தில் கையொப்பமிடுவது என்று ஏற்பாட்டுக் கட்சிகள் தற்போது திட்டமிட்டுள்ளன என்றும் மேலும் அறிய வருகின்றது.

இதேவேளை 21ஆம் திகதி தயாரிக்கப் பட்ட கூட்டு வரைவில் கையொப்பமிடுவதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுதியாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உறுதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சொல்வதற்கு அவருக்கு முழு உரிமையும் இருக்கிறது தான். ஆனால் இந்த ஆவணம் குறித்து தமது நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமும் மனோ கணேசனும் கடந்த முப்பத்தியோராம் திகதி சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்து தத்தமது நிலைப்பாட்டை விளக்கியிருந்தனர்.

குறிப்பாக ஹக்கீம் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய போது வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது நாம் எவ்வளவு தூரம் வலியுறுத்தினாலும் நடக்கப் போவதில்லை என்பது எனக்கு நன்கு தெரியும், ஆனாலும் அதனை வலியுறுத்தி நான் கடித்தில் கையெழுத்திட்டு விட்டு அதனை எனது மக்கள் ஒவ்வொருவருக்கும் போய் விளங்கப் படுத்த முடியாதல்லவா? அதனால் தான் அதனை நான் தவிர்க்க வேண்டியிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

உதாரணத்திற்கு அவர் சொன்ன விடயம் மிகக்காத்திரமானது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவை இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி சமர்ப்பித்த இறுதி அறிக்கையில் (தருஷ்மன்அறிக்கை) விடுதலைப் புலிகளும் அரச படைகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டனர் என்று தெரிவித்திருந்தது.

ஆனால் அந்த அறிக்கையை சுட்டிக் காட்டி கூட்டமைப்பு ஜெனிவாவுக்கு கடைசியாக அனுப்பிய கடிதத்தில், புலிகளும் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டனர் என்று குறிப்பிட்டிருந்தது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பலையை ஏற்படுத்தியிருந்தது. அந்த ஆவணத்தை தயாரித்த சுமந்திரன், அந்த அறிக்கையை சுட்டிக் காட்டியே அரச படைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரியிருந்தார். அதில் தவறில்லை என்ற போதிலும் புலிகள் மீது கூட்டமைப்பு புகார் செய்வதா என்றே தமிழ் மக்கள் கொதித்தெழுந்தனர். அதே போலத் தான், தான் இந்த ஆவணத்தில் கையொழுத்திட்டால் முஸ்லிம் மக்களும் பிரதிபலிப்பார்கள் என்ற அவரது விவாதம் நியாயமானதே. அது மாத்திரமன்றி அவரின் அரசியல் போட்டியாளர்கள் இதனை பாரிய பிரசாரமாக்கி விடுவார்கள் என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார் எனத் தெரிய வருகின்றது.

# யாரையும் விலக்கி விட்டு வரைவில் கையொப்பமிட்டு அனுப்புவோம்! ரெலோ கட்சி அதிரடியாக அறிவிப்பு!

இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்புவதற்காக ரெலோ எடுத்த முயற்சியில் இருந்து யாராவது பின்வாங்க விரும்பினால் அல்லது கையொப்பமிட மறுத்தால் அது யாராக இருந்தாலும் அவர்களை விலக்கி வைத்து விட்டு அந்த வரைவில் கையொப்பமிட்டு அனுப்புவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்வோம் என்று அந்தக் கட்சியின் பாராளுமன்றஉறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார். வவுனியாவில் 04 ஜனவரி 2022 செய்தியாளர்களை சந்தித்த எம். பி. அவர்களின் (20ம் பக்கம் பார்க்க)


**Balachandran Law Office**

**Balachandran Muthaiah**

**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கைப் பயணம் அரசாங்கத்தின் எதிர் பார்ப்புக்களை ஈடு செய்யுமா?



உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு சீன வெளிவிவகார அமைச்சர் வோங் யீ இலங்கை செல்லலுள்ளார். இவரது விஜயமானது நாளையும் மறுதினமும் ஜனவரி 8 – 9 ஆம் திகதிகளில் அமை யப் பெறவுள்ளதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் அறிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது சீன வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட உயர் மட்ட சந்திப்புகளில் கலந்துக் கொள்ள உள்ளார். சந்திப்புகளை தவிர்த்து பல நிகழ்வுகளில் கலந்துக் கொள்ள உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அண்மைக் காலமாக இலங்கை பெரும் அந்நிய செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் பல உலக நாடுகளிடம் அரசாங்கம் உதவிக்கரம் நீட்டியது. சீனாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள சில கசப்பான கொடுக்கல் வாங்கல்களினால் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கும் சீனாவிற்கும் இடையில் மனக்கசப்புகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு தீவுகளில் உத்தேசிக்கப்பட்ட மின் திட்டம் கைவிடப்பட்டமை மற்றும் உரம் விகாரம் என்பன இரு தரப்பு மனக்கசப்புகளுக்கு முக்கிய காரணமாகின. அந்த வகையில் டொலர் நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு அரசாங்கம் சீனாவிடம் உதவிக்கரம் நீட்டியப்போது அதனை நிராகிக்காது பயன்படுத்த முடியாத அந்நிய செலாவணி பாதுகாப்பு தொகையாக வழங்க முன் வந்தது. இலங்கையின் கடன் கோரிக்கை குறித்து பிரதமரை சந்தித்த சீன தரப்பு பெய்ஜிங்கிலிருந்து உறுதியான அறிவிப்பு கிடைக்கவில்லை என ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது. இதன்படி கடனுதவி தொடர்பில் சாதகமான பதிலை வழங்காமலிருந்த சீனா அதிகாரிகள் பிரதமருடனான கலந்துரையாடலை முடித்துக் கொண்டனர்.


மீண்டும் சில நாட்களுக்குப் பின்னர் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை சந்தித்தனர். இந்த கலந்துரையாடலின் போது 1,500 மில்லியன் டொலர்களை வழங்கலாம் ஆனால் எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்த முடியாது என குறிப்பிட்டனர். அதாவது ஒரு வைப்புத் தொகையாக மாத்திரமே காணப்படும். இந்த அறிவிப்பினால் சஞ்சலத்திற்கு உள்ளான அரச தரப்பு பயன்படுத்த முடியாத பணம் எதற்கு என அடுத்த கட்ட முயற்சியாக இந்தியாவிடம் சென்றனர். ஆனால் மத்திய வங்கி ஆளுநர் சீனாவிடமிருந்து குறித்த தொகையை பெற்றுக் கொண்டால் எம்மிடம் டொலர் இருப்பதாக காண்பிக்க முடியும் என்ற யோசனையை குறிப்பிட்டதாக ஆளும் தரப்பின் முக்கியஸ் ஒருவர் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் அரசாங்கத்தின் அணுமுறைகள் சீனாவை பல சந்தர்ப்பங்களில் நிலைக்குழைய செய்தது. குறிப்பாக இந்தியாடவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் முக்கியமானவையாகும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இந்தளவு விரைவில் இணக்கப்பாடுகள் எட்டப்படும் என சீனா ஒரு போதும் நினைத்திருக்கவில்லை. மாறாக டொலர் நெருக்கடிக்குள் தனது இலக்குகளை நகர்த்தும் வகையிலேயே செயற்பட்டது. இலங்கை மக்கள் வங்கியை கறுப்புப் பட்டிலிட்டமை ஊடாக அரசாங்கமும் மக்களும் சீனாவின் உண்மையான தோற்றத்தை புரிந்து கொண்டதாகவே கருத முடிகிறது. ஏனெனில் இதன் பின்னரே அரசாங்கத்திற்குள்ளும் நாட்டு மக்களிடையேயும் சீன எதிர்ப்பு கோஷங்கள் வலுப்பெற்றன .

அதே போன்று பிரச்சினைகளை சுமூகமாக கையாளாது கொழும்பில் உள்ள சீன தூதரகம் செயற்பட்ட விதம் விடுத்த அறிக்கைகள் என்பன கூட இரு தரப்பு நெருக்கடிக்கு வலு சேர்த்தது. இதனால் கொழும்பில் தனது இராஜதந்திர பணிகளை மறுசீரமைக்க பெய்ஜிங் தீர்மானித்துள்ளது.

எவ்வாறாயினும் சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயத்தை தொடர்ந்து டொலர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் 1.5 பில்லியன் டொலர்களை வழங்க பெய்ஜிங் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தொகையானது எந்த வகையில் இலங்கைக்கு பயன் தரு மென்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ள தாக கூறப்படுகின்றது. ஏனெனில் ஏற்க னவே சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் அதிகமாக உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் மீண்டும் அதே நாட்டிடம் பயன்படுத்த முடியாத கடனை பெறுவது என்பது இலங்கைக்கு நெருக்கடியையே ஏற்படுத்தும் என்பது பலதரப்பினதும் கணிப்பாகின்றது. எனவே சீன வெளிவிவகார அமைச்சரின் வருகையின் ஊடாக இரு தரப்பினரினதும் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா என்பதும் இங்கு முக்கியமாகின்றது.

ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு


ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
பகல் 10.00 மணிக்கு தைப்பொங்கல்
விசேட பூஜை நடைபெறும்.
உபயம்:- பொன்.சிவா சந்தானலட்சுமி. குடும்பம்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
பிரதோஷ விரதம்

14 ஜனவரி 2022 வெள்ளிக்கிழமை
இரவு ஐயப்பன் மகரஜோதி தரிசனம்

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை
தைப்பூசம்

விஷேட அபிஷேகமும் பூஜையும் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

தைப்பூசத் தினத்தன்று பால் குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும் .

தைப்பூச பூஜையை உபயம் செய்ய விரும்பும் உபயகாரர் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விஷேட ஐயப்பன் மண்டல பூஜை தினமும் நடைபெறுகின்றது.

ஐயப்ப படிகட்டு பூஜை செய்ய் விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும் .

இவ்வண்ணம்:- ஆலய தர்மகர்த்தா சபையினர்

# தமிழர் - முஸ்லிம் ஒற்றுமை செயல் வடிவம் காண வேண்டும்



இலங்கையின் தமிழர் முஸ்லிம் வேற்றுமைக்கு ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகால வரலாறு உண்டு. அது தமிழரின் தலைமைத்துவத்தால் ஏற்பட்ட வேற்றுமை என்பதை மனக்கசப்புடன் இங்கே பதிவு செய்ய வேண்டியுள்ளது. அந்த வரலாற்றை இங்கே மீட்டல் செய்து ஒரு புதிய சர்ச்சையை உருவாக்கு வது என் விருப்பமல்ல. ஆனாலும் பொது மேடைகளி லும் தமிழ் முஸ்லிம் தலைவர்களின் பேச்சுகளிலும் சதா உச்சரிக்கப்படும் ஓர் உவமை, அதுவும் கிழக்கு மாகாணச் சுழலில் உபயோகிக்கப்படுவது என்னவெனில் தமிழரும் முஸ்லிம்களும் பிட்டும் தேங்காய்ப் பூவும் போல் அங்கே நெருங்கி வாழ்கின்றனர் என்பதாகும்.

இந்த உவமையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் அன்றைய மட்டக்களப்பு பாராளுமன்ற அங்கத்தவர் இராசதுரை. மட்டக்களப்பு விளையாட்டு மைதானத்தில் தமிழரசுக் கட்சியின் கூட்டமொன்றில் அவர் பேசியதை நான் கேட்டு ரசித்தபோது எனக்குப் பாதின்ம வயது. அந்த உவமையின் யதார்தத்தை உணர்வதற்கு மூன்று தசாப்தங்களாவது சென்றன. அந்த யதார்த்தத்தை இங்கே விளங்குதல் அவசியம்.

பிட்டும் தேங்காய்ப்பூவும் என்று வருணிக்கும் போது அது குழல் பிட்டா வண்டுப் பிட்டா என்பதை எவரும் தெளிவுபடுத்துவதில்லை. குழல் பிட்டிலே மாவும் தேங்காயும் ஓரத்திலே தான் ஒட்டிக்கொண்டி ருக்கும். ஆனால் வண்டுப்பிட்டில் அவை இரண்டறக் கலந்திருக்கும். கிழக்கிலே தமிழ்முஸ்லிம் கிராமங்கள் பிட்டும் தேங்காயும் போல் காணப்பட்டாலும் அம் மக்களின் இன உறவு ஓர் உறவாக இருந்ததேயன்றி ஆழ உறவாக வளர்க்கப்படவில்லை.

அந்த ஓர் உறவு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்க்கப்பட்ட உறவு. அது குடும்ப உறவாகவோ உளங்கனிந்த நட்புறவாகவோ வளர வில்லை. உதாரணமாக, ஒரு தமிழருக்கு முஸ்லிம் கடையில் ஏதேனும் வாங்க வேண்டுமென்றால் அல்லது ஒரு முஸ்லிமுக்கு தமிழ் வைத்தியரின் சேவை தேவையென்றால் அந்தத் தேவைகள் இரு இனங்களையும் அத்தேவைகள் முடியும்வரை இணைத்தன. தேவை முடிந்தால் உறவும் முடிந்து விடும். அதை விட ஒரு முஸ்லிமின் விசேட வைபவங்களுக் குத் தமிழரையோ ஒரு தமிழனின் பண்டிகைக்கு முஸ்லிமையோ அழைத்தும் உபசரித்தும், இரு இனங்களும் கலந்த ஒரு விளையாட்டுக் கழகத்தையோ இசைக் குழுவையோ அல்லது மாதர் சங்கத்தையோ நிறுவியும் கலந்துறவாடுதல் மிகமிக அரிது. உதட்டளவிலே சிரித்துக் கொண்டு உள்ளத்திலே சந்தேகத்துடன் நடமாடிய இந்த இரு இனங்களும் இன்றாவது தாம் விட்ட தவறுகளை மறந்து ஒரு புதுப்பாதையில் அடியெடுத்து நடக்குமா? இது தான் இன்றைய தலைமைகளை எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்.

இந்தியாவின் அழுத்தத்தால் கொண்டு வரப்பட்ட 13ஆம் அரசியல் யாப்புத் திருத்தப் பிரேரணையையும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டிய வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையையும் அதற்கு வழங்கப்படவேண்டிய அதிகாரங்களையும் முற்றாக இல்லாமற் செய்வதற்கு ராஜபக்ச சிங்கள பௌத்த பேரினவாத அரசு சகல முயற்சிகளையும் மேற்கொள்கிறது. இந்தியாவின் மோடி அரசுடனான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தியும் இந்திய முதலாளித்துவத்தின் முதலீடுகளுக்கு இலங்கையில் வாய்ப்புகளை வழங்கியும் மேற்குறிப்பிட்ட யாப்புத் திருத்தத்தின் தேவையை பேச்சளவுடன் மட்டும் இந்தியா நிறுத்திக் கொள்ளும் ஒரு தந்திரத்தை இலங்கை அரசு கையாள்கிறது.

இந்தத் தந்திரத்தின் ஓர் அங்கமாக இலங்கை முஸ்லிம் தலைமைகளின் உட்பூ சல்களைப் பயன்படுத்தி முஸ்லிம் தமிழர் வேற்றுமையை விரிவாக்கி தமிழரின் கோரிக்கைக்கு முஸ்லிம்களின் ஆதரவை இல்லாமலாக்கும் உபாயத்தை ராஜபக்ஷ அரசு நாடுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாகவும் அதற் முன்னரும் முஸ்லிம்கள் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வன்முறைகளுக்கு ஆளாகி உயிர்களையும் உடமை ளையும் இழந்து நின்றபோது கைகட்டிப் பார்த்து நின்ற ராஜபக்ச ஆட்சியாளர்கள் இப்போது வடக்கு கிழக்கு விடயத்தில் முஸ்லிம்களை நேசிப்பதன் நாடகம் என்னவோ?

இவ்வாறான ஒரு சூ ழலிலே தான் தமிழ்த்தலைமைகள் முஸ்லிம் தமிழுறவு அவசியம் என்று பேசத் தொடங்கியுள்ளன. ஆனால் அதே தலைமைகள் வடக்கிலே இருந்து துரத்தியடிக்கப்பட்ட முஸ்லிம்களை மீண்டும் வரவேற்று அவர்களை அங்கு குடியேற்றும் விடயத்தில் அசிரத்தை காட்டுவதேனோ? அது ஒரு துன்பியல் நிகழ்வு என்று சாதாரணமாகக் கூறிக் கொண்டு அதற்கான மாற்றீடுகளை மேற்கொள்ளாதிருப் பதை என்னவென்று சரி காண்பது?

அதே போன்று கிழக்கிலே கல்முனைப் பிரதேச சபை இரண்டாகப் பிரிக்கப்படவேண்டுமென்ற சர்ச்சையிலும் முஸ்லிம்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்காதிருப்பதும் ஏனோ? பேச்சிலே முஸ்லிம்களுடன் ஒற்றுமையாகும் அவசியத்தை வலியுறுத்திக் கொண்டு செயலிலே அதனை வெளிப்படுத்தாதிருப்பதை எவ்வாறு சரி காணலாம்? அதேநேரம் முஸ்லிம் தலைமைகளும் சிங்களபௌத்த பேரினவாதிகளால் தமது இனம் தற்போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க எதிர்காலத்தில் நோக்கவிருக்கும் விளைவுகளைப் பற்றி அசிரத்தையாக இருந்து கொண்டு தமிழருடன் இணையாமல் தனித்து நின்று சமாளிக்கலாமென நினைப்பது மகா தவறு. இரண்டு சிறுபான்மை இனங்களையும் (20ம் பக்கம் பார்க்க)

## தமிழ் தலைவர்களின் ஒன்றிணைவு சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல!

தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற, கொள்கையளவில் ஒருமித்துப் பயணிக்க கூடிய தலைவர்களின் ஒன்றிணைவானது சிங்கள மக்களுக்கோ, ஆட்சியாளர்களோ எதிரானது அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் பேசும் தலைமைகளின் ஒன்றிணைவானது காலத்தின் தேவையாகும். தற்போதைய அரசாங்கமானது, தமிழ் பேசும் மக்களை ஒருதலைப்பட்சமாக நடத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அவ்விதமானதொரு சூ ழலில் தமிழ் பேசும் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாகும். தமிழ் பேசும் கட்சிகள் தமது மக்களின் நியாயமான கோரிக்கைகள் நீதியாக நிறைவேற்றப்படாமையின் காரணமாகவே ஒன்றிணைந்து இந்தியப் பிரதமர் மோடிக்கு இலங்கை அரசாங்கத்திற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு வலியுறுத்துமாறு கோருவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அதற்காக அனைவரும் ஏற்றுக்கொண்ட வரைவென்றை தயாரித்து வருகின்றோம்.



குறிப்பாக மூவினக் குழுமங்களின் விடயங்களை உள்ளீர்ப்பதில் அதிகளவான கரிசனையைக் கொண்டுள்ளோம். அதற்காரணமாக வரைவினை இறுதி செய்வதில் சில தாமதங்கள் காணப்படுகின்றன. தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் ஊடாக அத் தாமதங்களை சீர் செய்ய முடியும் என்றே கருதுகின்றோம். ஓரிரு நாட்களில் குறித்த வரைவு இறுதி செய்யப் பட்டு பின்னர் தலைவர்களால் கைச்சாத்திடப்படும்.

இதேவேளை தமிழ் பேசும் தலைவர்கள் ஒன்றிணைவதால் சிங்கள பெரும்பான்மை மக்களோஅபவ் ஆட்சியில் உள்ள ஆட்சியாளர்களோ அச்சமடைய வேண்டியதில்லை. தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமக தமது உரிமைகளுக்காக போரடிக் கொண்டிருக்கின்றார்கள். பலத்த வாக்குறுதிகளை மாறிமாறி வந்த அரசாங்கங்கள் முன்வைத்தாலும் அதனை அவை முழுமையான நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே முறையாக அந்த விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கான கோரிக்கையையே நாம் முன்வைக்கவுள்ளோம். இந்தியாவை நாட வேண்டியதன் அவசியம் இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் 1983ஆம் ஆண்டி லிருந்து தற்போது வரையில் இந்தியா தலையீடு களைச் செய்து வருகின்றது. அத்துடன், இந்தியா எமக்கு அயல் நாடாகும். இலங்கை வாழ் மக்களின் பூர்வீகம் இந்தியாவிலிருந்து ஆரம்பித்தமைக்கான சான்றுகளும் உள்ளன.

ஆகவே பிராந்தியத்தில் தலைமையிடத்தில் உள்ள இந்தியாவின் ஊடாகவே அனைத்தனை விடயங்களும் கையாளப்படுகின்றது. மேலும் இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவே அரசியல் சாசனத்தில் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அது இனப்பிரச்சினைக்கான தீர்வாக இல்லாது விட்டாலும் அதிகாரப்பகிர்வின் முதலாவது படியாக உள்ளது. அவ்விதமான காரணங்களால் இந்தியாவின் உதவி எமக்கு இன்றும் அவசியமாகவுள்ளது. அத்துடன் இந்தியாவின் ஊடாக எமது விடயங்களை முன்னெடுப்பது கடமையும் கூட. எனவே இந்த விடயங்கள் பக்குவமாக யாருக்கும் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# எமது நாட்டை முதலில் பொருளாதார ரீதியில் வாக்குரோத்து ஆக்கி இன்று சர்வதேச நாடுகளின் ஆதரவை சிதைத்தது உங்கள் நாடே - சீனப் பிரதமருக்கு விஜயதாஸ கடிதம்


பொருளாதாரரீதியில் எங்கள் நாட்டை வங்குரோத்து ஆக்கும் நடவடிக்கையை முதலில் உங்கள் நாடு ஆரம்பித்தது அதன் பின்னர் வரலாறுமுழுவதும் எங்களிற்கு பாரிய ஆதரவை வெளிப் படுத்திய நாடுகளுடனான எங்கள் உறவை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கு எழுதியுள்ள கடிதத்தில் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்

சீனாவின் வெளிவிவகார கொள்கை மற்றும் பொருளாதார மூலோபாயத்தை வலுப்படுத்துவதற்காக என தெரிவித்து புதிய பட்டுப்பாதை திட்டத்தை உங்கள் நாடு ஆரம்பித்தது முதல் எங்கள் இரு நாடுகளிற்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உறவுகள் வேறு பாதையில் பயணிக்க தொடங்கி யுள்ளன. உங்கள் நட்பு இனிமேலும் நேர்மை யானது இதயசுத்தியுடனானது இல்லை என்பது வெளிப்படையான விடயம்.

அதேவேளை நீங்கள் எங்கள் உறவு களை பயன்படுத்தி உலகின் வல்லரசா வதற்கான உங்கள் முயற்சிகளை மேற் கொள்கின்றீர்கள்

ஏனைய வலுவான நாடுகளுடனான அதிகார மோதலிற்காக எங்கள் தேசத்தை முதல் நாடாக பலிகொடுப்பதன் மூலம் எங்கள் பிரர்நதியத்திலும் உலகிலும் நில வும் சமாதானத்தை குலைக்கின்றீர்கள்.

பொருளாதாரரீதியில் எங்கள் நாட்டை வங்குரோத்து ஆக்கும் நடவடிக்கையை முதலில் உங்கள் நாடு ஆரம்பித்தது அதன் பின்னர் வரலாறு முழுவதும் எங்களிற்கு பாரிய ஆதரவை வெளிப்



படுத்திய நாடுகளுடனான எங்கள் உறவை சிதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. இதனால் இந்தியா அமெ



ரிக்கா ஜப்பான் ஐரோப்பிய நாடுகள் அவுஸ்திரேலியா — எதிர்காலத்தில் ரஸ்யா ஆகிய நாடுகளின் ஆதரவை இழக்கின்றோம். இதனை எங்களுடைய முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல முன்கூட்டியே எதிர்வு கூறினார். 1955 இல் இந்தோனேசியாவில் இடம்பெற்ற பான்டுங் மாநாட்டில் சீனாவின் முதல் பிரதமர் ஜஜீ என்லாய் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் முன்னி லையில் இனி வரும் யுகங்களில் ஐரோ ப்பாவிலிருந்து எங்கள் பிராந்தியத்தை நோக்கிய படையெடுப்புகள் இடம் பெறாது மாறாக பொருளாதார ஆக்கிர மிப்பு எங்கள் பிராந்தியத்தின் அமை தியை குலைத்து எங்களை ஆபத்துக் குள்ளாக்கும் என அவர் தெரிவித்தார். 65 வருடங்களிற்கு முன்னர் அவர் தெரி வித்தது எவ்வளவு உண்மையாகியுள் ளது. என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆரியகுளத்தை பௌத்த மயமாக்க ஆளுர் திட்டமா?

யாழ்ப்பாணம், ஆரியகுளத்தில் பொதுமக்களின் சமய உரிமையை மீறும் வகையில் செயற்படும் அதிகாரம் மாநகர சபைக்குக் கிடையாது என்று சாரப்பட்டு ஒரு வகையில் மாநகர சபையை அச்சுறுத்தும் பாணியில் யாழ்ப் பாண மாநகர சபை ஆணையாளருக்கு வடக்கு மாகாண ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

யாழ். மாநகர முதல்வரின் ஏற்பாட்டில் தனியார் நிதிப் பங்களிப் புடன் ஆரியகுளம் அழகுபடுத்தப்பட்டு பொழுது போக்குத் திடலாகப் பொது மக்களின் பாவனைக்குத் திறந்து விடப் பட்டிருந்தது. ஆரியகுளப் புனரமைப்புப் பணிகளின் போது, மதச் சின்னங்களை நிறுவுவதில் இழுபறி நிலை தோன்றி யிருந்த நிலையில் எந்தவொரு மத அடையாளத்தைப் பிரதி பலிக்கும் வகையிலான கட்டமைப்பெதனையும் அமைப்ப தில்லை என்று மாநகர சபையில் தீர்மானம் இயற்றப்பட்டி ருந்தது.

எனினும் அரசியலமைப்பின்படி மத அனுட்டானங்களைத் தடுக்கும் அதிகாரம் சபைக்கு இல்லை என்று சுட்டிக் காட்டி யிருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, ஆரியகுளம் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் உரித்து ஆவ ணங்களைச் சமர்ப்பிக்குமாறும் மாநகர ஆணையாளரைப் பணித்திருக்கிறார்.

இது இவ்வாறிருக்க அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் அணியும் அஞ்சலி செலுத்தியுள்ளது.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 21ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 05 ஜனவரி 2022 ஆகும்.

இந்நிலையில் யாழ்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இட மொன்றில் யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தலை மையிலான அணியினர் குமாரின் உருவப்படத்துக்குச் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com






# 2022இல் ஈழத்தமிழர் அரசியல்?

நாலடியாரில் ஒரு கூற்றுண்டு. அதாவது கழிந்து செல்லும் நாட்கள் அனைத்தும் உனது வாழ்நாளாகும். நமது அரசியலுக்கும் இது பொருந்துமா? ஏனெனில் ஒரு அரசியல் போராட்டத்தில் ஆண்டுகள் கழிகின்ற போது அந்த ஆண்டுக்கான அடைவுகளை மக்கள் காண வேண்டும். ஆனால் ஈழத் தமிழ் தேசிய அரசியலை பொறுத்தவரையில் அடைவுகள் எப்போதுமே எட்டாக் கனியாகவே இருக்கின்றது. வரலாம் நடக்கலாம் நடக்கூடும் இப்படியான சொற்களோடு பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. இப்படி ஒவ்வொரு ஆண்டும் கழிந்து செல்கின்ற போது தமிழர் அரசியலில் எவ்வித முன்னேற்றங்களும் பதிவாகவில்லை ஆனால் பல்வேறு விடயங்கள் நடக்கின்றன நடப்பதாக காண்பிக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் சிந்தித்தால் கழிந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டும் ஈழத் தமிழர் அரசியலின் வீழ்ச்சியை விரைவுபடுத்தும் ஆண்டுகளா?

இலங்கையின் மீதான சர்வதேச அழுத்தங்களுக்கான பிள்ளையார் சுழியிடப்பட்டு இந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் பத்து வருடங்கள் பூர்த்தியடைகின்றது. 2012 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மீதான முதலாவது பிரேரணை அமெரிக்க ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது. இது அப்போது அமெரிக்க பிரேரணை என்றே பரவலாக அழைக்கப்பட்டது. அப்படி பார்த்தால் அமெரிக்க, இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்து பத்து வருடங்களாகின்றது.

இறுதி யுத்தத்தின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறல், என்னுமடிப்படையில் தான் இந்த ஆழுத்தங்கள் பிரயோகிக்கப் பட்டன. இப்போதும் தொடர்கின்றன. ஆனால் பத்து வருடங்களாகியும் இன்னும் இலங்கை அரசு பொறுப்புக் கூற வில்லை. சர்வதேச அழுத்தங்களின் மூலம் இலங்கை அரசை அடிபணியச் செய்யலாம் என்பது நமது நம்பிக்கையாக இருக்கும் போது மறுபுறம் பொறுப்புக் கூறலை தொடர்ந்தும் வெற்றிகரமாக தட்டிக் கழிக்கலாம் என்னும் நம்பிக்கையுடன் சிங்கள ஆளும் வர்க்கம் செயற்பட்டு வருகின்றது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் யுத்தத்தில் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்ட சிங்கள ஆளும் வர்க்கமானது யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருடங்களிலும் தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை தோற்கடிப்பதிலும் வெற்றி கண்டிருக்கின்றது. இந்த அனுபவங்களுக்கு சாட்சியாகவே 2021ஆம் ஆண்டு, தோல்வியை தந்து நம்மை சாதாரணமாக கடந்து செல்கின்றது. முன்னைய ஆண்டுகள் போல்!

2010இல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறியதிலிருந்து தமிழ் தேசிய தரப்புகளுக்கிடையிலான ஒற்றுமை தொடர்பில் ஏராளமாகவே பேசப் பட்டிருக்கின்றது. ஒற்றுமைப்படுத்துவதற்கான ஏராளமான முயற்சிகளும் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் எதுவும் வெற்றியளிக்கவில்லை. இந்த அனுபவங்களுக்கும் 2021 விதிவிலக்காக இருக்கவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு ஒரு கடிதத்தை அனுப்புவதில் கூட தமிழ்தேசிய கட்சிகளால் ஒற்றுமையுடன் செயற்பட முடியவில்லை. 2021இல் இடம்பெற்ற ஆக்கபூர்வமான விடயமென்றால் ஒன்றைத் தான் குறிப்பிட முடியும். அதாவது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழ் பேசும் கட்சிகளுக்கிடையிலான சந்திப்புக்களைத் தான் குறிப்பிட முடியும்.

இந்தியாவை நோக்கி செல்லும் நோக்கிலேயே இந்த சந்திப்புக்கள் இடம் பெற்றன. இந்தியஇலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவை நோக்கிச் செல்லும் அணுகுமுறை முற்றிலும் சரியானது. இந்தக் கட்டுரை எழுதப்படும் வரையில் குறித்த சந்திப்புக்களின் மூலமான இணக்கப்பாடு ஒரு ஆவணமாக வெளியில் வந்திருக்கவில்லை. நாடு கடும்போக்கு ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற நிலையில் தமிழ் மக்களுக்கு ஓரளவாவது பாதுகாப்பாக இருக்கும் மாகாண சபை முறைமையும் கூட இல்லாதொழிக்கப் படலாம் என்னும் ஆபத்தான சூழலில் தான் மேற்படி முயற்சி மேற்கொள்ளப் பட்டிருந்தது.

அரசியலில் எதிர்வுகூறல்கள் எப்போதுமே சிக்கலானது ஏனெனில் உலக அரசியலில் மாற்றங்களை எதிர்வு கூறமுடியாது. பேராசிரியர் நோம் சொம்ஸ்கி கூறுவது போன்று நாளைய காலநிலையை இன்று எதிர்வுகூற முடியாது. நிலைமைகள் எப்படியும் மாற்றமுறலாம் ஆனால் அந்த மாற்றங்களின் தன்மையை ஒரளவு அனுமானிக்கலாம். இந்த அனுமானங்களின் அடிப்படையில்தான் அரசியல் ஆய்வுகள் முன்வைக்கப்படுகின்றன. எனவே எந்தவொரு ஆய்வும் முடிந்த முடிவல்ல.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் 2022 இல் இடம்பெறப் போகும் நிகழ்வுகளில் முக்கியமானதாக இருக்கப் போவது இரண்டு விடயங்கள் தான். ஒன்று, தமிழ் பேசும் கட்சிகள் என்னுமடிப்படையில் இந்தியாவை நோக்கி முன்வைக்கப்படவுள்ள கூட்டுக் கோரிக்கை முக்கியமானதொரு விடயமாக இருக்கும். இது நடந்தால் 1987 இந்தியஇலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னரான சூழலில், புதுடில்லியை நோக்கி முன்வைக்கப்பட்ட கோரிக்கையாக இருக்கும். இந்தியா தொடர்ந்தும் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் வலியுறுத்திவருகின்ற நிலையில் மேற்படி கோரிக்கைக்கு ஒரு முதன்மையான அரசியல் முக்கியத்துவமுண்டு.

அடுத்தது ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா மீளவும் இணையவுள்ளது. 2024 வரையில் அமெரிக்கா இந்த பொறுப்பில் இருக்கப் போகின்றது. டொனால்ட் ரம் தலைமையிலான குடியரசு கட்சி ஆட்சியை கைப்பற்றியதை தொடர்ந்து 2018இல் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறியது. இதனைத் தான் ஜனவரியில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் சில விடயங்களை அறிவிக்கவுள்ளதாக சிலர் கூறி வருகின்றனர். ஒபாமா தலைமையிலான ஜனநாயக கட்சியின் நிர்வாகம் தான் 2012இல் இலங்கையின் மீதான முதலாவது பிரேரணையை நிறைவேற்றியிருந்தது. இந்த நிலையில் மீளவும் ஜனநாயக கட்சியின் நிர்வாகம் மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயற்படவுள்ள நிலையில் இலங்கையின் மனித உரிமை விடயங்கள் மீது சில அழுத்தங்களை பிரயோகிக்க வாய்ப்புண்டு.

இந்த இரண்டு விடயங்கள் தான், ஈழத் தமிழர் அரசியலில் செல்வாக்குச் செலுத்தவுள்ள பிரதான விடயங்களாக இருக்கப் போகின்றன. இதற்கப்பால் பலரும் பல விடயங்கள் தொடர்பில் பேசலாம் ஆனால் அவைகள் எவையும் பிரதான விடயங்களாக இருக்க முடியாது. ஏனெனில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வில் இந்தியாவின் உறுதியான தலையீடுகள் இல்லாவிட்டால் இந்த விடயத்தில் முன்னேற்றங்களை காண முடியாது.

நான் மேலே குறிப்பிட்ட இரண்டு பிரதான விடயங்களின் அடிப்படையில் தான் 2022இற்கான தமிழர் அரசியல் நகரப் போகின்றது. ஆனால் இந்த விடயத்திலும் அளவுக்கதிகமான கற்பனைகள் கூடாது. இதனை விளங்கிக் கொள்வதற்கு இந்துசமுத்திர பிராந்தியத்தில் இடம்பெறும் புவிசார் அரசியல் அதிகாரப் போட்டிகளை உற்றுநோக்க வேண்டும். புவிசார் அரசியலை கையாளுவதன் ஊடாக தமிழர்கள் வெற்றிகளை குவிக்க முடியுமென்று கூறுவதில் எப்போதுமே இந்தக் கட்டுரையாளர் உடன்படுவதில்லை. ஏனெனில் புவிசார் அரசியலில் தமிழர்கள் ஒரு தரப்பல்ல. ஒரு தரப்பாக இருப்பதற்கான பலமும் தமிழர்களிடம் இல்லை.

இலங்கையை மையப்படுத்தியிருக்கும் புவிசார் அரசியல் என்பது அடிப்படையில் இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களுடன்தான் தொடர்புறுகின்றது. இந்த அடிப்படையில் சிந்தித்தால் இலங்கைத் தீவின் மீதான வெறுப்பும் காதலும், சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் வெளிவிவகார முடிவுகளில் தான் தங்கியிருக்கின்றது. சிங்கள ஆட்சியாளர்கள் இந்தி அமெரிக்க அதிகார சக்திகளுடன் ஒத்துப் போகும் போது, அது காதலாகவும் முரண்படும் போது அது வெறுப்பாகவும் வெளிப்படுகின்றது.(9ம் பக்கம் பார்க்க)

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



LAW OFFICE
of
THELMA WILLIAMS

Barrister, Solicitor, Notary Public, Commissioner (ON)
LL.B (Sri Lanka)

❑ FAMILY LAW:
- Divorce
- Separation
- Property Division

❑ REAL ESTATE

❑ WILLS and ESTATES

❑ EMPLOYMENT LAW
- ODSP, CPP disability
- Wrongful Dismissal
- Long-term Disability

❑ ADMINISTRATIVE LAW

❑ POWERS OF ATTORNEY, AFFIDAVITS, STATUTORY DECLARATIONS

❑ விவாகரத்து, சட்டப்படி பிரிதல், சொத்துக்களை பிரித்தல் போன்ற குடும்ப வழக்குகள்,

❑ காணி, வீடு வாங்குதல், விற்றல் தொடர்பான சட்டங்கள்

❑ உயில் மற்றும் எஸ்ரேற்ஸ்

❑ தொழில்சார் சட்டம்

❑ நிர்வாக சட்டம்

❑ சட்ட ஆவணங்களை உருவாக்குதல்

கனேடிய சட்டத்துறையில் பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்ட வல்லுனர்களின் நம்பிக்கையும், உத்தரவாதமுமான சேவை

Quality, Dependable Service with many years of Canadian legal experience.

TEL:647-777-8424
Suite #300, 10 Milner Business Court,
Scarborough, Ontario M1B 3C6
(just 2 minutes north of HWY 401)

PLEASE CALL FOR AN APPOINTMENT

# மஹிந்த ராஜபக்ஷாவை திருப்பதிக்கு அழைத்துச் சென்ற விமான உரிமையாளர் கணநாதன் என்ற தமிழர் யார்?

ராஜபக்ஷக்களின் ஒவ்வொரு அசைவும் இப்போது தீவிர ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டுள்ளது. இந்நாட்டு அரசியல் தலைவர்களும் தொழிலதிபர்களும் இந்தியாவில் திருப்பதிக்கு சென்று தராசில் அமர்ந்து தங்கள் எடைக்கு தகுந்த நேர்த்தி கடன் செய்கிறார்கள், ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக மகிந்த ராஜபக்ஷா திருப்பதிக்கு சென் றால் மக்கள் சிந்திக்கவும் செய்கிறார் கள்.

அதன்படி கடந்த வாரம் திருப்பதி சென்ற மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினர் சமூக வலை தளங்களுக்கு நல்ல பதிவுகள் கொடு த்துள்ளனர். மகிந்த யாத்திரையின் போது அரசாங்க பணத்தில் திருப்பதி செல்வது பொருத்தமானதா? மகிந்த ராஜபக்ச யாருடைய ஜெட் விமானத்தில் சென்றார்? இந்தப் பயணத்தை ஏற்பாடு செய்தவர் யார்? என பல்வேறு கேள்வி களை பலர் எழுப்பியுள்ளனர்.

கண்ணா அவருடன் பயணம் மேற் கொண்டார் என்பதை அலரிமாளிகை வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன. அரசு ஒரு பைசா கூட செலவு செய்ய வில்லை. ஆனால் மகிந்த ராஜபக்ஷவை ஜெட் விமானத்தில் திருப்பதிக்கு அழை த்து சென்றுள்ளார் கண்ணா. அத்துடன் இந்த கண்ணா தமிழன் என்பதால் இப் போதெல்லாம் அதிகம் பேசப்படுகிறது.

வடக்கில் அல்லது மலையகத்தில் உள்ள தமிழர்களை விட கொழும்பில் உள்ள வணிக மற்றும் அரசியல் உயர் மட்டத்தில் இந்த கண்ணாவைப் பற்றி அதிகம் தெரியும். சிங்கள மேட்டுக்குடி யினர் அவரை கண்ண கண்ணா என்று அழைத்தாலும், அவர் பெயர் கணநாதன் போலத் தான் ஒலிக்கிறது. வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளின்படி அவர் பெயர் வேலுப்பிள்ளை கணநாதன். அதன்படி வேலுப்பிள்ளை பெயர் காரணமாக விடுத லைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெயருக்கு தொடர்பு உள்ளது. ஆனால் வேலுப்பிள்ளை கணநாதன் வடக்கில் வல்வெட்டித்துறையில் பிறக்கவில்லை. இவர் பண்டாரவளையில் பிறந்தவர். பண்டாரவளை புனித தோமஸ் கல்லூரி யில் க.பொ.த உயர்தரம் விஞ்ஞானம் பயின்றார். பின் கணக்கியல் பாடப் பிரிவை முடித்து விட்டு கனநாதன் ஹட்டன் நஷனல் வங்கியில் வங்கிக்கு வேலைக்குச் சென்றார். பண்டாரவளை ஹட்டன் நஷனல் வங்கியில் பணி புரியும் போது இந்தியப் பத்திரிகை



ஒன்றில் வெளியான வேலை வாய்ப்பு விளம்பரத்தில் உறவினர் ஒருவர் கண் ணில் பட்டார். உகண்டாவில் உள்ள இம்பீரியல் ஹோட்டல் குழுமத்தில் கணக்கியல் பணிக்காக பணியாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவ தாக இந்திய செய்தித்தாளில் விளம்பரம் வெளியாகி யுள்ளது. கணநாதன் உகண்டாவில் உள்ள இம்பீரியல் ஹோட்டலில் ஒரு காலியிடத்திற்கு விண்ணப்பித்தார். கணநாதன் நேர்காணலுக்காக பம்பாய் சென்று, பின்னர் உகண்டாவில் உள்ள இம்பீரியல் ஹோட்டல் குழுமத்தில் வேலைக்குச் சென்றார். அது 1986 ஆம் ஆண்டு. உகண்டாவில் உள்ள இம்பீரி யல் ஹோட்டல் குழுமம் 12 ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைக் கொண்ட ஒரு பெரிய வணிகமாகும். கணநாதன் அதன் CEO ஆனார். அத்தகைய ஹோட்டல் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருப்பது ஆபிரி க்க நாடுகளின் தலைவர்கள், அரசியல் வாதிகள், தொழில்முனைவோர் ஆகியோ ருடன் பிணைப்புக்கு ஒரு சிறந்த படியாகும். உகண்டாவில் உள்ள இம் பீரியல் ஹோட்டல் குழுமத்தின் CEO கணநாதன், உகண்டாவில் புதுப்பிக்கத் தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்துள்ளார். சிறந்த காற்று மற்றும் சூ ரிய ஆற்றல் கொண்ட ஆப்பிரிக்க நாடுகளில் மின் உற்பத்தி திட்டங்கள் தங்கச் சுரங்கத்திற்கு அடுத்தபடியாக உள்ளன. உகண்டா தொழிலதிபரான கணநாதன், உகண்டா ஜனாதிபதி ககுடா முசெவேனியுடன் நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்டார். ஜனாதி பதி காகோ உகாண்டா தொழிலதிபர் கணநாதனை ஆபிரிக்காவில் உள்ள தனது நண்பர்களின் தலைவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். உகண்டாவில் பெரும் முதலீடு செய்துள்ள கண நாதனை அந்நாடுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்ய வைக்க. அதற்காக அவர் அங்கு சென்ற தால் பல ஆபிரிக்க நாடுகளின் அரச தலைவர்கள் அவருடைய நெருங்கிய நண்பர்களாக மாறினர்.

2005இல் கணநாதன் மஹிந்த ராஜபக்ஷ வின் நட்பில் இணைந்தார் போர் முடிந்து அது மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சென்றதும் இலங்கை அரசுக்கு ஆபிரிக்க நாடுகளின் ஞாபகம் வந்தது. யுத்தத்தின் பின்னர் மகிந்த ஆபிரிக்க நாடுகளுடன் உறவு களை ஏற்படுத்த விரும்பினார். முதல் தடவையாக உகண்டாவுடனான இராஜ தந்திர உறவுகளுக்கு மகிந்தவால் வழி வகுக்க முடிந்தது.

2013ஆம் ஆண்டு முதன் முறையாக உகண்டாவுடன் இராஜதந்திர உறவு களை ஏற்படுத்திக் கொண்ட மஹிந்த, கணநாதனை அதன் முதலாவது தூது வராக்கினார்.

2014ம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு கூட்டம் இலங்கைக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது. நாட்டில் உள்ள பல அதிகாரி களும் அரசியல்வாதிகளும் நாட்டிற்காக பிரச்சாரம் செய்ய மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு (20ம் பக்கம் பார்க்க)


தற்பொழுது Markham நகரிலும்
(Near 14th Ave & McCowan Rd)

**Math & Physics Tutoring**
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
Locations: Brampton (Near Bovaird Rd & Brisdale Dr)
Markham (Near 14th Ave & McCowan Rd)
Tel: 416-524-0424

# ஐ.நா.வில் கைலாசா.... மோடியைச் சீண்டும் நித்தியானந்தா

ஐ.நா-வில் நித்தியானந்தா முன் வைத்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டு புதியதல்ல.

பல்வேறு வழக்குகள் காரணமாக வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற நித்தியானந்தா 'கைலாசா' என்கிற தேசத்தை நிர்மாணித்திருப்பதாகச் சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிவித்தார். தெற்கு



அமெரிக்காவின் ஈகுவாடார்தீவு அருகே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அந்தப் புதிய தேசத்தை இதுவரை உலக நாடுகள் ஏதும் அங்கீகரிக்கவில்லை. இந்தச் சூழலில்,ஐ.நா-வின் சிறுபான்மையினர் விவகாரக் கவுன்சில் கூட்டத்தில் 'கைலாசா' பிரதிநிதியாக ஒருவர் பங்கேற்றிருப்பதும் இந்துச் சமூகத்தின் ஒற்றைப் பிரதிநிதியாகத் தன்னை நிலைநிறுத்த நித்தியானந்தா முயற்சி செய்வதும் பரபரப்பைப் பற்ற வைத்திருக்கிறது.

ஜனவரி 3 ஆம் திகதி நித்தியானந்தாவின் பிறந்த நாள் கொண்டாடப் படவிருக்கும் நிலையில் 'கைலாசா' தொடர்பான சர்ச்சை மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது!

உலகெங்கும் சிறுபான்மைச் சமூகத்தினர் சந்திக்கும் பிரச்னைகள் குறைகள் குறித்துப் பேசுவதற்காக ஆண்டுக்கொரு முறை ஐ.நாவின் சிறுபான்மையினர் விவகாரக் கவுன்சில் கூட்டம் நடத்துவது வழக்கம். அந்த வகையில் கடந்த டிசெம்பர் 3ஆம் திகதி ஸ்விட்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் 14ஆவது கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கைலாசா தேசத்தின் சார்பில் பங்கேற்றுப் பேசியிருக்கும் ஸ்ரீநித்ய மோக்ஷப்ரியானந்தா என்பவர் இந்தியாவில் இந்துக்களுக்கும் அவர்களின் வழிபாட்டு முறைகளுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது. நித்தியானந்தா போன்ற இந்து மதக் குருமார்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. மீடியாக்கள் மூலமாகப் பொய்யான செய்திகளைத் திட்டமிட்டே பரப்புகிறார்கள் என்று வெடித்துத் தீர்த்திருக்கிறார்.

இந்தப் பேச்சு ஐ.நாவின் இணைய தளத்திலும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. நித்தியானந்தா மீது இன்டெர்போல்' அமைப்பு 'ப்ளூ கார்னர்' அறிவித்தலை வழங்கியிருக்கிறது. அவர் இருப்பிடம் பற்றிய தகவல் தெரிந்த உலக அரசுகள், இன்டெர்போலிடம் தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்பது அந்த அறிவிப்பின் சாரம்சம். இந்தச் சூழலில் 'கைலாசா' நாட்டின் பிரதிநிதியாக ஒருவர் ஐ.நா-வரை சென்றிருப்பது பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியிருக் கிறது.

இது குறித்து நம்மிடம் பேசிய நித்தியானந்தாவின் முன்னாள் சிஷ்யர்கள் சிலர் "ஐ.நாவில் நித்தியானந்தா முன் வைத்திருக்கும் இந்தக் குற்றச்சாட்டு புதியதல்ல. 'இந்தியாவில் இந்துக்களுக்குப் பாதுகாப்பு இல்லை, இந்து மதச் சடங்குகளைக் கடைப் பிடிக்க பல்வேறு தொந்தரவுகள் நிலவுகின்றன' என்று 2018, 2019ஆம் ஆண்டுகளிலேயே ஐ.நாவுக்குப் புகார் கடிதங்களை அனுப்பியிருந்தார்.

இந்தியாவிலிருந்து தலைமறைவான பிறகு கடந்த ஜூலை மாதம் ஐ.நா நடத்திய பெண்களுக்கு எதிரான குற்றங்கள் கூட்டத்திலும் கைலாசா சார்பில் பங்கேற்று இந்தியாவில் தன் ஆசிரமத்தைச் சேர்ந்த பெண்கள் தாக்கப் படுவது குறித்துப் புகார்களை முன் வைக்க வைத்தார். தற்போது ஐ.நா. அரங்கத்துக்குள்ளேயே அமர்ந்து பேசும் அளவுக்குத் தன் ஆட்களை அனுப்பி வைத்திருக்கிறார். ஐ.நா-வில் 'கைலாசா' சார்பில் பேசியிருக்கும் மோக்ஷப்ரியானந்தா சென்னையைச் சேர்ந்தவர் தான். மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஒருவரின் தூரத்து உறவினரான இவர் இன்ஜினீயரிங் முடித்ததும் நித்தியானந்தாவுடன் சேர்ந்து கொண்டார். வெளிநாட்டுப் பக்தர்களைக் கையாளும் பொறுப்பு இவரிடம் அளிக்கப்பட்டிருந்தது.

தற்போது நித்தியானந்தா தலை மறைவாகி விட்டதால் நித்தியானந்தாவின் வெளி நாட்டுத் தொடர்புகளை மோக்ஷப்ரியானந்தா தான் கவனித்துக்கொள்கிறார். ஐ.நா நடத்தும் இப்படியான சிறு கூட்டங்களில் எந்த அமைப்புகள் வேண்டுமானாலும் பங்கேற்கலாம். திபெத், தைவான் போராட்டக் குழுவினர் கூட இப்படி பல்வேறு கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.


தங்களது போராட்டங்கள், அமைப்பின் முகவரி, சர்வதேச அங்கீகாரம் இவற்றைக் காட்டினாலே ஐ.நா-வின் அரங்கத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படும். அந்தவகையில் தான 'கைலாசா' தேசத்துக்கும் வாய்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. அதை ஒரு நாடாக ஐ.நா அங்கீகரிக்கவில்லை. ஓர் அமைப்பாகத் தான் அங்கீகரித்திருக்கிறது.

இந்தியாவிலிருந்து தான் விரட்டப்பட்டதற்கு ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க அமைப்புகள் எந்தக் கண்டனமும் தெரிவிக்கவில்லை, தனக்கு ஆதரவாகப் பேசவில்லை என்கிற கோபம்




நித்தியானந்தாவுக்கு உண்டு. இதனால் தான் 'பா.ஜ.க அரசில் இந்துக்களுக்குப் பாதுகாப்பில்லை' என்று சர்வதேச அமைப்புகளிடம் புகார்களைத் தட்டி விடுகிறார் நித்தி. வாரணாசியில் காசி கைலாசநாதர் ஆலயத்தைத் திறந்து வைத்தும் கேதர் நாத்தில் ஆதி சங்கரரின் சிலையை நிறுவி யும் இந்து மதத்தின் ஒற்றை அடையாளமாக சர்வதேச அளவில் தன்னை முன் நிறுத்துகிறார் பிரதமர் மோடி. அவருக்குப் போட்டியாக ஐ.நா-வில் புகாரளித்து தன்னை இந்து மதத்தின் ஒற்றைப் பிரதிநிதியாக நிலைநிறுத்திக் கொள்ளப் பார்க்கிறார் நித்தி.

ஜனவரி 3ஆம் திகதி,ஷ தன்னுடைய பிறந்தநாளையொட்டி கனடாவின் டொரன்டோ நகர் மேயர் ஜான் டோரியிடமிருந்தும் அமெரிக்காவின் புல்லர் டோன் நகர் மேயர் ஃப்ரெட் ஜூங்கிட



மிருந்தும் வாழ்த்து பெற்று தனக்கு சர்வதேச அங்கீகாரம் இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்க முயல்கிறார். ஐ.நா-வில் மோக்ஷப்ரியானந்தா முன் வைத்திருக்கும் குற்றச்சாட்டுகள் மார்ச் 2022 இல் நடைபெறும் 'மனித உரிமைக் கவுன்சில்' கூட்டத்தில் விவாதத் துக்கு எடுத்துக் கொள்ளப்பட வாய்ப்பிருக்கிறது. அப்படி நிகழும் பட்சத்தில் பல்வேறு கேள்விகளுக்கு இந்திய அரசு பதில் சொல்ல வேண்டிய நெருக்கடி உருவாகும்" என்றனர்.

இந்தியாவிலிருந்து தான் விரட்டப்பட்டதற்கும் அதற்குப் பிறகு தனக்கு ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் 'ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க அமைப்புகள் எந்த விதமான உதவியும் செய்யவில்லை' என்கிற கோபத்திலிருக்கும் நித்தியானந்தா "இந்துச் சமூக வாக்குகளை வைத்துதானே இவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். இவர்களின் முகத்திரையை இந்துக்களிடம் கிழிக்கிறேன் என்று தன் சகாக்களிடம் சவால் விட்டிருக்கிறாராம். அதன் ஒரு பகுதி தான் ஐ. நா சிறுபான்மையினர் கவுன்சில் கூட்ட விவகாரம் என்கிறது விவரமறிந்த வட்டாரம். இன்னும் என்னென்ன கூத்து களெல்லாம் அரங்கேறக் காத்திருக்கிறதோ? நன்றி:- விகடன்

# 2022இல் ஈழத்தமிழர் அரசியல்?

(7ம் பக்கத் தொடர்ச்சி) அன்று ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் வெளிவிவகார அணுமுறையினால்தான், இந்திரா காந்தி – இந்தியா, சிங்கள ஆட்சியாளர்கள் மீது வெறுப்புற்றது. அந்த வெறுப்பின் விளைவாக வந்ததுதான், இந்தியஇலங்கை ஒப்பந்தம். எனவே அதிகார சக்திகளின் காதலுக்கும் வெறுப்புக்கும் இடையில் தான் தமிழர்களின் அரசியல் சிக்கியிருக்கின்றது. இதனை விளங்கிக் கொள்ளாமல் புவிசார் அரசியல் தொடர்பில் சிந்தித்தால் அது ஒரு நல்ல பகல் கனவாகவே இருக்க முடியும்.

இலங்கைத் தீவின் இன்றைய அரசியலை ஒரு ஆட்சி மாற்ற தோல்விக்கு பின்னரான அரசியலாகவே நாம் நோக்க வேண்டும். 2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்னால் இந்திய அமெரிக்க பின்னணி இருந்ததாக பரவலாக நம்பப்பட்டது. தனது தோல்விக்கான காரணமாக இந்திய உளவுத்துறையின் மீதே மகிந்த முதலில் குற்றம் சாட்டியிருந்தார். இதே 2015, இல் தான் நீண்டகாலமாக இராணுவ ஆட்சியின் பிடியிலிருந்த மியன்மாரிலும் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டது. அமெரிக்கா அதனை ஆதரித்திருந்தது. ஆனால் இந்த இரண்டு ஆட்சி மாற்றங்களுமே தோல்வியில் முடிந்திருக்கின்றன. தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ச கொம்பனி மீளவும் ஆட்சியிலிருக்கின்றது. மியன்மாரில் மீளவும் இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கின்றது. ஆங்சான் சூகி மீண்டும் சிறையிலடைக் கப்பட்டிருக்கின்றார். இவ்வாறானதொரு சூழலில் இலங்கையின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக் கள் இருக்குமா?

ஏனெனில் இலங்கையின் மீது கடுமையான அழுத்தங்களை பிரயோகித்தால் கடும்போக்கு ராஜபக்ச தரப்பு சீனாவை நோக்கி அதிகம் சாய்ந்து விடுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. இலங்கையின் மீதான சீனாவின் பிடி மேலும் இறுகுவதை தடுக் கும் அதே வேளை ஆட்சியாளர்களும் அதிகம் சீனாவை நோக்கி சாய்ந்து விடாத வகையிலும் தான் அமெரிக்க அழுத்தங்கள் பிரயோகிப்படலாம். இந்த அழுத்தங்களின் இறுதி இலக்கு மீண்டுமொரு ஆட்சி மாற்றமாகவும் அல்லது ராஜபக்ச முகாமிற்கு ள்ளேயே ஒரு அரசியல் சீரமைப்பாகவும் இருக்கலாம். இதற்கிடையில் பிறிதொரு விடயத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது 2024இல் இடம்பெறவுள்ள தேர்தலில் மீளவும் அமெரிக்காவில் குடியரசு கட்சி அதிகாரத்தை கைப்பற்றி னால் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறிவிடும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு தான் 2022இல் இடம்பெறப் போகும் அரசியல் நகர்வுகளை நாம் அனு மானிக்க வேண்டும். ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது நிலைமைகள் எவ்வேளையிலும் நமக்கு பாதகமாக மாறலாம். எனவே நிலைமைகள் சாதகமாக இருக்கின்ற சூழலை கணித்து அதற்கேற்ப செயற்படுவதன் மூலம் தான் பெறக் கூடியதை நாம் பெற முடியும். ஒரு தனி பாய்சலில் விடயங்களை தமிழர்களால் ஒரு போதுமே வெற்றி கொள்ள முடியாது. ஏனெனில் அதற்கான பலமோ வாய்ப்புக்களோ வெளியாரின் ஆதரவோ ஈழத்தமிழர்களுக்கில்லை. இந்த பன்னிரெண்டு வருடகால அரசியல் அனுபவங்கள் இதனை தெளிவாக நிரூபித்திருக்கின்றன.

எனவே 2022ம் அண்டு இதுவரை கற்றுக் கொண்டதைக் கொண்டு செயற்படுவதற்கான முக்கியமான காலமாக இருக்கப் போகின்றது. ஆனால் தொடர்ந்தும் கற்றுக்கொள்ள மறுத்தும் அல்லது, கற்றுக் கொண்டதாக கற்பனையில் மிதந்து காலத்தை விரயம் செய்தால் இந்த ஆண்டும் முன்னைய ஆண்டுகள் போன்றே தோல்வியை தந்து நம்மை சாதாரணமாக கடந்து செல்லும். கழிந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டும், நமது அரசியலின் வீழ்ச்சியை மேலும் உறுதிப்படுத்தும். இறுதியில் தமிழர்கள் இருப்பார்கள் ஆனால் தமிழருக்கான தனித்துவமான அரசியல் இருக்காது.

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வு க்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 ஜனவரி 2022 முதல் 07 ஜனவரி 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஏழாவது ஆன்டு நினைவு நாள் 31 டிசம்பர் 2021 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 29வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நல்லதம்பி இரத்தினசபாபதி

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு தினம் 30 டிசம்பர் 2021 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்புப் உணவு வழங்கினார்கள். திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது மூன்றாவது ஆண்டு நாள் நினைவு நாள் 13 ஜனவரி 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 26வது ஆண்டு நினைவஞ்சலி




### திருமதி தெய்வானைப்பிள்ளை வேலுப்பிள்ளை

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தெய்வானைப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களது 26வது ஆண்டு நாள் நினைவு நாள் 5 ஜனவரி 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தெய்வானைப் பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைஞ்சலி

### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்
### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 01 ஜனவரி 2022 சனிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரதும் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




30 டிசம்பர் 2021 வியாழக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களது 10வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




31 டிசம்பர் 2021 வெள்ளிக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது 7வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2022 சனிக்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா தம்பதிகள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




01 ஜனவரி 2022 சனிக்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா தம்பதிகள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




01 ஜனவரி 2022 சனிக்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா தம்பதிகள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




01 ஜனவரி 2021 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களதும் திருமதி றெஜினா எபநேசர் சாமுவேல் அவர்களதும் நினைவாக அன்னார்களது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஜனவரி 2022 சனிக்கிழமை நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை, திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரது 29வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




01 ஜனவரி 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சர்வானந்தன் பவளராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஹரிசனின் 20வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஹரிசன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




01 ஜனவரி 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவபாலன் லலிதகுமாரி இணையர், மகள் சந்தியா சிவபாலன் ஆகியோர் இணைந்து புத்தாண்டு தின அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




02 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சரவணபவன் அஸ்வின் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




02 ஜனவரி 2022 ஞாயிற்றுக்கிழமை வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்டிருந்த DR இராமநாதன் K. இளங்கோ அவர்களது 2வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 டிசம்பர் 2021 அன்று கனடாவில் வசிக்கும் திரு நந்தன் துஷானந்தன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய பிறந்த நாளுக்காக திரு நந்தன் அவர்கள் 03 ஜனவரி 2022 திங்கட்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 டிசம்பர் 2021 தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்தவர்களான திரு செல்லையா இராஜதுரை திருமதி நாகரெத்தினம் இராஜதுரை ஆகியோரது நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 04 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 ஜனவரி 2022 புதன்கிழமை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வேலுப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை அவர்களது 26வது ஆண்டு நினைவுநாளாதகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




06 டிசம்பர் 2022 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி சிவசிதம்பரம் வசந்தாதேவி அவர்களது 60வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி வசந்தாதேவி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# *Buying Home / Selling / Investing*
*Knowledge . Experience . Dedication*




# இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களும்
# தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களும்

உங்கள் ஆதரவுக்கு நன்றி!

HOMELIFE HIGHER STANDARDS

**Indra** Michael Xavier
Sales Representative
**647 995 6829**
*indra.m.xavier@gmail.com*

**HomeLife/ Future**
Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr. Markham ON, L3S 4N8
Office: 905-201-9977 Fax: 905 201 9229
*Independenlty Owned and Operated







# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.ca

## மண்டல மகர விரத விஞ்ஞாபனமும் ஐயப்பன் மாலை அணியும் வைபவமும்

### காலம் 16-11-2021 செவ்வாய்க்கிழமை முதல் 21-01-2022 வெள்ளிக்கிழமை வரை

ஐயப்பன் மெய்யடியார்களே!

கலியுகத்தில் தர்மம் குன்றி அதர்மம் மேலிட்டு துன்ப சாகரத்தில் உழலும் வேளையில் தன்னை நாடி வந்த பக்தர்களை கைவிடாத தெய்வம், பட்ட பந்தம் அணிந்து சின்முத்திரைகாட்டி நிராயுதபாணியாய் காட்சி தந்து நெஞ்சுருகி, நெஞ்சுருக வைத்து எம்மை அயராது ரட்சிக்கும் பகவான் ஐயப்பன். ஸ்காபரோ - 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும். கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக மாலை அணியும் வைபவம் இடம் பெறும். மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும். அடியார்கள் யாவரும் ஆலயத்திற்கு வருகை தரும் போது கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

### தினமும் இரவு 9.15மணிக்கு ஹரிவராஸன பூசை இடம் பெறும்.

**குருமாற்றம் மஹாயாகம்** - 13-11-2021 சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் காலை 11.00 மணிவரை பூசைகள் நடைபெறும்.

**வனதேவதை, பூஜை** - 15-11-2021 திங்கட்கிழமை
மாலை 6.00 மணி

**விசேட ஹோமம் - மாலை அணிதல்** - 16-11-2021
செவ்வாய்க்கிழமை -அதிகாலை 4.00 மணிக்கு கணபதி ஹோமம், தொடர்ந்து சாஸ்தா ஹோமம். துளசி மாலை அணியும் வைபவம் அதிகாலை 5.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை இடம் பெறும்

**சுவாமிமார்களின் விளக்குப்பூசை**
26-11-2021 வெள்ளிக்கிழமை, 27.11.2021 சனிக்கிழமை ஆகிய இருதினங்களும் மாலை 5.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை இடம் பெறும்.

**ஆஞ்சநேய யாகம்** - 29-11-2021 திங்கட்கிழமை
காலை 9.00 முதல் மதியம் 12.00 மணி வரை நடைபெறும்.

**சுவாமிமார்களின் இலட்சார்ச்சனை**
03.12.2021 வெள்ளிக்கிழமை, 04.122.2021 சனிக்கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரையும் இடம் பெறும்.

**1008 கலச சங்காபிசேகம்** - 12-12-2021
ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம் பெறும்.

**பால்குட அபிஷேகம்** 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் 11.00 மணிவரையும், மாலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் இடம் பெறும்.

**புலிப்பால் வேட்டை** - 19-12-2021 ஞாயிற்றுக்கிழமை மதியம்

**நாகராஜ உற்சவம் - சர்ப சாந்தி** - 19-12-2021
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையும் இடம் பெறும்.

**நெய் நிரப்புதல், இருமுடி கட்டுதல்**
25-12-2021 சனிக்கிழமை, 26-12-2021 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் அதிகாலை 4:00 மணிமுதல் மாலை 5:00 மணி வரை இடம் பெறும்.

**நெய் அபிஷேகம்**
27-12-2021 திங்கட்கிழமை, 28.12.2021 செவ்வாய்க்கிழமை
அதிகாலை 4.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை நடைபெறும்.

**ஆஞ்சநேயர் ஜெயந்தி**
01.01.2022 - 02.01.2022 (சனி - ஞாயிறு) ஆகிய இரு தினங்களும் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை யாகம், அபிஷேகம், பூஜை நடைபெறும்.

**மஞ்சமாதா திருவிழா, புஷ்பாபிசேகம்**
01-01-2022 சனிக்கிழமை முதல் 14-01-2022 வெள்ளிக்கிழமை வரை.

**மகர சங்கிராந்தி, திருவாபரணம், மகரஜோதி தரிசனம், பூச்சொரிதல், தைப்பொங்கல்**
14-01-2022 வெள்ளிக்கிழமை

**வைரவர் மடை, வனபூஜை, குருதிபூஜை, வேண்டுதல் நிறைவேற்று உற்சவம்**
21-01-2022 வெள்ளிக்கிழமை மாலை
6.00 மணிக்கு இடம் பெறும்.



### பக்தர்களுக்கு முக்கிய அறிவித்தல்கள்

1. கோவிற்19 அரசாங்க சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடக்க வேண்டும்.
2. மாலை அணிதல் 16.11.2021 செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும்.
3. கோவிற்19 சுகாதார விதிகளுக்கு அமைவாக மாலை அணிதல் இடம் பெறும்.
4. கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்.
5. இவ்வருடம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளுவதில்லை.
6. ஆலயத்தினுள் புகைப்படம், வீடியோ எடுப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்பதனையும் அனைவருக்கும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

- இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர் சபை

**கோவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியை எடுத்துக்கொள்ளுங்கள்.**

இன்றே உங்கள் பூஸ்டர் தடுப்பூசியை முன்பதிவு செய்யுங்கள்.

கோவிட்-19 -இலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

நமது பாதுகாப்பு நம் அனைவரின் கையில்.



**ontario.ca/covid19** -ஐ சென்று பாருங்கள்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario


# மறு முறை ஒரு முறை பார்ப்போமா?



விடை கொடு எங்கள் நாடே கடல் வாசல் தெளிக்கும் வீடே

பனை மர காடே, பறவைகள் கூடே மறுமுறை ஒரு முறை பார்போமா? என்ற பாடலை எப்போது கேட்டாலும் இதயத்ததில் ரண வலியை கொடுக்கும்.

இதில் மெல்லிசை மன்னர் எம்.எஸ் விஸ்வநாதனோடு இணைந்து பிரிவோம் நதிகளே பிழைத்தால் வருகிறோம்

மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம் கண்ணீர் திரையில் பிறந்த மண்ணை கடைசியாக பார்க்கின்றோம்

தலையில் கொஞ்சம் நெஞ்சில் அதிகம் சுமைகள் சுமந்து போகின்றோம் .. என்று நம் உயிரின் கண்ணீர் குரலாக மாணிக்க விநாயகத்தின் குரல் ஒலிக்கும்.

ஆனால் இன்று அந்த குரலுக்கு சொந்தமான அவர் நம்மோடு இல்லை. ஆம் பிரபல பின்னணிப் பாடகரும் நடிகருமான மாணிக்க விநாயகம் கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி இரவு காலமானார்.

1943 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி மயிலாடுதுறையில் பிறந்த அவர் உலகை அச்சுறுத்திய கொரோனா பாதிப்பிற்கு அண்மையில் உள்ளான போதும் அதிலிருந்து மீண்டார். ஆயினும் உடல் நலக்குறைவு காரணமாக தனது 78ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

இவர் பிரபல பரதநாட்டிய ஆசிரியர் வழுவூர்பி.ராமையா பிள்ளையின் இளைய மகன் ஆவார். 2001 ஆம் ஆண்டு வெளியான 'தில்' திரைப்படத்தில் கண்ணுக்குள்ளே கெளுத்தி வெச்சிருக்கா சிறுக்கி யப்போ யப்போ என்ற பாடல் மூலம் தனது திரைப் பயணத்தை தொடங்கிய இவர் பல்வேறு மொழிகளில் 800க்கும் மேற்பட்ட திரைப்பட பாடல்களை பாடியுள்ளார்.

பொம்பளைங்க காதலத்தான் நம்பிவிடாதே நம்பிவிடாதே நம்பியதால் நொந்து மனம் வெம்பி விடாதே என்ற பாடல் உள்ளிட்ட பல பிரபல்யமான பாடல்களை சூர்யா விஜய் விக்ரம் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுக்கு பாடியுள்ளார்.

அது மட்டும் அல்ல பல்வேறு திரைப்படங்களில் குணச்சித்திர வேடங்களிலும் நடித்துள்ளார். திரைப்பாடல்களை தவிர பக்தி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள் என 15,000 க்கும் மேற்பட்ட பாடல்களை மாணிக்க விநாயகம் பாடியுள்ளார்.

திருடா திருடி திரைப்படத்தில் நடிகர் தனுஷின் தந்தை கதாபாத்திரத்தில் இவரது நடிப்பு நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து தில், யுத்தம் செய், வேட்டைக்காரன், கம்பீரம், பேரழகன் தொங்கா தொங்கடி,கள்வனின் காதலி,போஸ்,திமிரு, கிரி, பலே பாண்டியா, வ குவாட்டர் கட்டிங் உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களிலும் மாணிக்க விநாயகம் நடித்துள்ளார்.

2013இல் வவுனியாவில் கட்டப்பட்ட ஒரு கோயில் விழாவில் பாடுவதற்காக மாணிக்க விநாயகம் உள்ளிட்டவர்கள் இலங்கைக்கு வருகைத்தர இருந்தனர். ஆனால் அப்போது இலங்கை உள்நாட்டுப் போர் முடிந்து சில ஆண்டுகளே ஆகியிருந்த நிலையில், தமிழ்நாட்டின் இசைக் கலைஞர்கள் இலங்கை செல்ல வேண்டாம் என்று தமிழ்நாட்டில் சில அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இதன் பின்னர் தமிழ் உணர்வாளர்களின் போராட்டத்துக்கு மதிப்பளித்து, இலங்கையில் தாம் கலந்து கொள்ளவிருந்த இசை நிகழ்ச்சியை இரத்து செய்வதாக அப்போது மாணிக்க விநாயகம் அறிவித்தார்.

அப்போது இவருடன் இலங்கை செல்லவிருந்த பிற இசைக் கலைஞர்களும் தங்கள் பயணத்தை இரத்து செய்தனர். வெற்றிலை சிவக்கும் வாய், உயரமான கம்பீர உடல் நெற்றியில் குங்கம பொட்டு என்பவற்றோடு அதிகமாக வேட்டி சட்டையில் காட்சி தரும் அவர் தனது பெயரை போல குணத்திலும் மாணிக்கமாக ஜொலித்தவர் என்று அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவிக்கின்றனர்.

இன்று அவர் நம்மை விட்டு பிரிந்தாலும் அவரது மாணிக்க குரல் காற்று இருக்கும் வரை இந்த பூமியில் கலந்து ஜொலித்திருக்கும். கலைஞர்கள் என்றும் அழிவதில்லை.

# பிரான்ஸில் தடுப்பூசியைப் புறக்கணித்த இரட்டையர்களுக்கு நேர்ந்த கதி!

பிரான்சில் தடுப்பூசி செலுத்தி கொள்ளாத பிரபல இரட்டையர்களின் மரணம் குறித்து பல முக்கிய தகவல் வெளியாகியுள்ளது. பிரான்ஸ் நாட்டின் பிரபல இரட்டையர்கள் மற்றும் முன்னாள் தொலைக்காட்சி நட்சத்திரங்களான Grichka மற்றும் Igor Bogdanoff இருவரும் கடந்த சில நாட்களுக்கு முன்பு COVID-19 நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

நமது ஆரோக்கியமான வாழ்க்கை முறை தமக்கு பாதுகாப்பை கொடுக்கும் என்று தெரிவித்து தடுப்பூசிகளை புறக்கணித்து வந்த அவர்கள் கடந்த டிசம்பர் மாதம் உடல் நிலை (20ம் பக்கம் பார்க்க)

# புதிய ஆண்டைத் திட்டமிடுவது

ஒரு புதிய அரசியல் ஆண்டில் என்ன காத்திருக்கிறது? அல்லது என்ன செய்ய வேண்டும்? என்று முடிவெடுப்பதெல்லாம் கடந்த ஆண்டின் தொடர்ச்சியாகத் தான் அமைய முடியும். எனவே கடந்த ஆண்டைப் பற்றிய தொகுக்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் தான் புதிய ஆண்டைத் திட்டமிடலாம்.

கடந்த ஆண்டில் தமிழ் அரசியலில் ஒப்பீட்டளவில் மூன்று முக்கிய நகர்வுகள் இடம் பெற்றன. முதலாவது கடந்த மார்ச் மாத ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு மூன்று கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரு கூட்டுக் கோரிக்கையை முன் வைத்தன.

இரண்டாவது கடந்த செப்டம்பர் மாத ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டு கோரிக்கையை முன் வைத்தன.

மூன்றாவதாக அண்மை மாதங்களாக இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன்வைக்கும் நோக்கத்தோடு ஒருங்கிணைப்பு முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் தமிழ் அரசியலில் வேறு பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் இம் மூன்று நகர்வுகளையும் குறிப்பாக கவனிப்பதற்கு ஒரு காரணம் உண்டு. ஏனெனில் இம்மூன்று நடவடிக்கைகளும் முதலாவதாக கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள். இரண்டாவதாக வெளிவிவகார முன்னெடுப்புக்கள். சுமந்திரன் தலைமையிலான குழு அமெரிக்காவுக்கு சென்றதையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அது தனியோட்டம், ஒருங்கிணைந்த முயற்சி அல்ல.

இனப்பிரச்சினை எனப்படுவது சாரம்சத்தில் ஓர் அனைத்துலக பிரச்சினையே என்று அரசியல் அறிஞர்கள் கூறுவார்கள். அதற்கு அனைத்துலக தீர்வுதான் உண்டு. அதன்படி பார்த்தால் அனைத்துலகத்தை கையாள்வதற்கு ஏதோ ஒரு பொறிமுறை வேண்டும். ஏதோ ஒரு வழி வரைபடம் வேண்டும்.

அதாவது தமிழ் மக்களுக்கு ஒரு வெளிவிவகாரக் கொள்கையும் வெளிவிவகார கட்டமைப்பும் வேண்டும். எனவே கடந்த ஆண்டில் ஜெனிவாவை நோக்கியும் இந்தியாவை நோக்கியும் கோரிக்கைகளை முன்வைக்கும் நடவடிக்கைகளை தொகுத்துப் பார்த்தால் அவை வெளிவிவகார நடவடிக்கைகள் தான். இந்த அடிப்படையில் இம்மூன்று வெளிவிவகார நடவடிக்கைகளையும் சற்று ஆழமாகப் பார்க்கலாம்.

முதலாவது முயற்சி மன்னாரைச் சேர்ந்த தமிழ்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தலைவர் சிவகரனால் முன்னெடு




க்கப்பட்டது. இதில் ஏனைய சிவில் சமூக பிரதிநிதிகள் இணைந்து மூன்று கட்சிகளையும் ஒருங்கிணைத்து ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. இது கடந்த 12 ஆண்டுகளில் ஏற்பட்ட ஒரு முக்கியமான அடைவு. இக்கடிதம் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே தமிழ் மக்களின் பிரச்சினையை கொண்டு போக வேண்டும் என்ற மிகத் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தது. அம் முதலாவது கடிதத்தின் தொடர்ச்சியாக மேலும் இரு கடிதங்களை அனுப்புவதற்கு முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் ஐநா தீர்மானத்தின் பூச்சியவரைபு வெளியிடப்பட்டதும் கூட்டமைப்பு மேற்கு நாடுகளுடன் இணைந்து தீர்மானத்தை இறுதியாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதனால் ஒருங்கிணைப்பு முயற்சிகள் குலைந்தன. குறைந்த பட்சம் ஏனைய இரண்டு கட்சிகளை யாவது ஒருங்கிணைக்கக் கூட முடியவில்லை. ஏனென்றால் 13வது திருத்தம் தொடர்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியையும் ஒரே நிலைப்பாட்டிற்குக் கொண்டுவர முடியவில்லை. இது முதலாவது முயற்சி.

இரண்டாவது முயற்சி, கடந்த செப்டம்பர் மாதம் ஜெனிவா கூட்டத் தொடரையொட்டி ஐந்து கட்சிகள் அனுப்பிய கடிதம். இவ்வொருங்கிணைப்பு முயற்சியை டெலோ இயக்கம் முன்னெடுத்தது. தமிழரசுக் கட்சி அதை ஆதரிக்கவில்லை. அதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இணையவில்லை.

மூன்றாவது முயற்சி இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இந்தியாவை நோக்கி ஒரு கூட்டுக் கோரிக்கையை முன்வைப்பது. இதுவும் டெலோ இயக்கத்தால் முன்னெடுக்கப்படுகிறது. இது முன்னைய ஒருங்கிணைப்பு முயற்சியின் அடுத்த கட்டம். இந்த முயற்சியிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணையவில்லை. தமிழரசுக்கட்சி தொடக்கத்தில் ஒத்துழைக்கவில்லை. எனினும் பின்னர் ஒத்துழைத்தது. இடையில் சுமந்திரன் தலைமையிலான ஓரணி அமெரிக்காவுக்கும் சென்றது. இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் முழு வெற்றி பெறவில்லை.

மேற்கண்ட மூன்று நடவடிக்கைகளையும் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் விடயங்களை தமிழ் மக்கள் கற்றுக் கொள்ளலாம்.

முதலாவது மேற்கண்ட மூன்று ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கும் காரணம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தமையும் மாற்று அணி மூன்று ஆசனங்களை பெற்றமையும் தான். தேர்தலில் தோற்ற மாவை சேனாதிராஜா கட்சிக்குள் தனது நிலையை பலப்படுத்துவதற்காக கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சியை முதலில் முன்னெடுத்தார். அதைக் கூட்டமைப்பின் தலைமை ரசிக்கவில்லை. எனவே அந்த முயற்சிகள் தேங்கி நின்றன.

அதன் அடுத்த கட்டமாக டெலோ அதை முன்னெடுத்தது. அதற்கு பின் வரும் காரணங்கள் உண்டு. கடந்த பொதுத் தேர்தலில் டெலோ இயக்கம் மூன்று ஆசனங்களை பெற்றதால் அது தன் பேரம் பேசும் சக்தி அதிகரித்திருப்பதாக கருதுகிறது. இது முதலாவது காரணம். கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சிகள் தொடர்ச்சியாக அவமதிக்கப்பட்டதால் அவை தமது முதன்மையை நிலை நாட்ட முற்படுகின்றன என்பது மற்றொரு காரணம். மூன்றாவது காரணம் டெலோவின் பேச்சாளரான குருசாமி சுரேந்திரன். எனவே மேற்படி ஒருங்கிணைப்பு முயற்சிகள் யாவற்றுக்கும் அடிப்படை காரணம்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசியல் வலுச் சமநிலை மாறத் தொடங்கியது தான்

இரண்டாவது கற்றுக் கொண்ட பாடம் கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தாலும் மாற்று அணி ஒருதிரண்ட பலமாக மேலெழத் தவறி விட்டது. கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் பெரும்பான்மை ஆசனங்களை கொண்டிருக்கிறது. அது தான் மேற்கண்ட மூன்று வெளிவிவகார நடவடிக்கைகளிலும் தமிழரசுக்கட்சி தனியோட்டம் ஓடக் காரணம். அது மட்டுமல்ல கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

மற்றொரு நகர்வாகிய சுமந்திரன் குழுவின் அமெரிக்க பயணத்துக்கும் அதுவே காரணம். கடந்த செப்டம்பர் மாத ஜெனிவா கூட்டத்தொடரையொட்டி தமிழரசுக் கட்சி தனியாக ஜெனிவாவுக்கு அனுப்பிய கடிதம் என்று கிடைத்த உத்தியோகப்பற்றற்ற ஆவணம் ஒன்றின் முதல் பந்தியில் அது தெளிவாக கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்ற ஒரே தமிழ் கட்சியாகிய நாம் என்று அந்த முதல் பந்தி தொடங்குகிறது.

அது தான் வெளிவிவகார நடைமுறையும் ஆகும். அரசியலில் வெளிவிவகாரம் எனப்படுவது இரண்டு அதிகார மையங்களுக்கு இடையிலான உறவு தான். உள்நாட்டில் தேர்தல் மூலம் ஒப்பீட்டளவில் அதிக மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு கட்சியோடு தான் வெளி அரசுகளும் நிறுவனங்களும் "என்கேஜ்" பண்ணும். நாட்டில் அதிகார மையமாக காணப்படும் கட்சிகள் அல்லது அதிகாரத்தின் மீது ஏதோ ஒரு விதத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய சிவில் தரப்புக்கள் என்று கருதும் தரப்புக்களை நோக்கித் தான் வெளிநாட்டுத் தூதுவர்களும் வருவார்கள். வெளிவிவகார அணுகுமுறைகளில் அது ஒரு அடிப்படை விதி.

தேர்தல் மூலம் அதிக மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு கட்சியோடு தான் வெளித் தரப்புகள் உறவாடும். இந்த அடிப்படை தான் தமிழரசுக் கட்சி தனியோட்டம் ஓடக் காரணம். புவிசார் அரசியலையும் பூகோள அரசியலையும் தமிழரசுக் கட்சியை விட வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாகவும் திறமையாகவும் கையாள வேண்டும் என்று கருதும் மாற்று அணி அவ்வாறு மக்கள் ஆணையைப் பெற வேண்டும். வெளிவிவகாரம் எனப்படுவது இலட்சியவாதமல்ல. கற்பனாவாதமுமல்ல. அது ஒரு செய்முறை. அரசியல் அதிகாரத்தைப் பெறுவதிலிருந்து அது தொடங்குகிறது. இது இரண்டாவது.

மூன்றாவது கற்றுக்கொண்ட பாடம் மேற்கண்ட மூன்று ஒருங்கிணைப்பு முயற்சிகளின் போதும் கூட்டுக் கோரிக்கைகளுக்கிடையே ஒருங்கிணைவு இல்லை. ஒரே ஆண்டுக்குள் நிகழ்ந்த இரண்டு ஜெனிவா கூட்டத்தொடர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்கிடையே தொடர்ச்சி இருக்கவில்லை, ஒருங்கிணைப்பும் இருக்கவில்லை. அது போலவே இந்தியாவை நோக்கி முன் வைக்கப்படும் கோரிக்கை தொடர்பிலும் கட்சிகளை ஒருங்கிணைப்பது கடினமாயுள்ளது. இது எதைக் காட்டுகிறது என்றால் ஒருங்கிணைப்பு முயற்சிகளை தேசத்தைக் கட்டியெழுப்புதல் என்ற அடிப்படையில் சிவில் அமைப்புகளே முன்னெடுக்க வேண்டும் என்பதுதான்.

சிவில் சமூகங்களால் முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைப்பு முயற்சிகளால் மட்டும்தான் எல்லா கட்சிகளையும் குறைந்தபட்சம் விவகாரமைய ஒருங்கிணைப்புக்குள்ளாவது கொண்டு வர முடிகிறது. (21ம் பக்கம் பார்க்க)


கோழி இறைச்சி – ஆட்டிறைச்சி
உங்கள் வீட்டுக்கே விநியோகம்!





உங்கள் குடும்பத்தின் தேவைக்கேற்ற அளவில் உங்கள் வீட்டு வாசல் வரை விநியோகம் செய்கின்றோம். அத்துடன் குடும்பத்தினர் சமைக்கக் கூடிய முறையில் சிறுசிறு துண்டுகளாக துப்பரவாக வெட்டியும் தருகின்றோம்.

வாரத்தில் வெள்ளி – சனி – ஞாயிறு தினங்களில் மட்டுமே சேவை.

ஒரு முறை வாங்கிச் சமைத்துப் பாருங்கள்!

தொடர்புகளுக்கு:- சானு 416 456 3051 ஹீ 647 328 8880

# இலங்கையை மக்கள் வாழ முடியாத தேசமாக மாற்றுகின்றார்களா?

விலைவாசி உயர்வு விண்ணைத் தொடும் அளவிற்கு சென்று கொண்டிருக்கிறது. எரிவாயு சிலிண்டர்களின் வெடிப்புச் சம்பவங்களும் தொடர்கின்றன. வெடிப்புக்கான காரணங்கள் கண்டறியப்பட்ட பின்னரும் அது தொடர்பான தாக்கமான நடிவடிக்கைகளில் தயக்கம் காட்டப்படுகின்றன. எரி பொருட்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக வர்த்தகப் பெருமக்கள் மனம் போன போக்கில் விலை அதிகரிப்பை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை.

வெளிநாடுகளிடம் இருந்து பெறப்பட்ட கடனை மீளச் செலுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கம் காட்டிய அக்கறையீனம் காரணமாக மீண்டும் இலங்கையின் தரநிலை கீழ் நிலைக்கு சென்றுள்ளது. அன்னியச் செலாவணி கையிருப்பும் தொடர்ந்தும் பின் நிலையிலேயே காணப்படுகிறது. அன்னியச் செலாவணி கையிருப்பு தொடர்பாக அரசாங்கம் கூறி வரும் சமாதானம் யாவும் கற்பனை நிறைந்ததாகவே காணப்படுகிறது.

உண்மை நிலையை ஆராய்கின்ற போது அன்னிய செலாவணி கையிருப்பு மோசமான கட்டத்தில் காணப்படுகிறது. பெற்ற கடனை திருப்பிச் செலுத்துவதற்காக மக்களின் அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கப்பட்ட நிதியையும் அரசாங்கம் கையேற்கும் நிலை தோன்றியுள்ளது.

விவசாய அமைச்சின் பிழையான அணுகு முறையால் அந்த அமைச்சில் 25 மாதங்களில் ஐந்து செயலாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். நாடு மிக மோசமான பொருளாதார சவால்களை சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த கால கட்டத்தில் இவர்களின் பிழையான அணுகு முறையால் சீனாவிலிருந்து இயற்கை சேதனப்பசளையை இறக்குமதி செய்ய எடுக்கப்பட்ட முடிவின் காரணமாக தரமற்ற இயற்கை சேதனப் பசளை இங்கே கொண்டு வரப்பட்டது.

இந்த பசளை தரமற்றது என முடிவான பிறகும் அதனை திரும்ப பெற மாட்டோம் என சீன நிறுவனம் அடம் பிடித்தது உடன் இலங்கையை சர்வதேச நீதிமன்றம் வரை கொண்டு சென்றது. இறுதியில் 6.5 மில்லியன் அமெரிக்க டாலர்களை இந்த நாட்டின் மக்கள் சீனாவுக்கு வழங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தரமற்ற இயற்கை சேனப் பசளையை விவசாய அமைச்சு விநியோகித்ததால் தமது பயிர்கள் நாசமாகியுள்ளது எனக் கூறி விவசாயிகள் அரசாங்கம் வழங்கிய பசளை பொதிகளை விவசாய இலாகா விடம் வீசி எறிந்த நிலையை காணக் கூடியதாக இருந்தது.

தற்போது அரச மருத்துவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் நோயாளர்கள் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். ஆசிரியர், அதிபர் சங்கங்கள் தமக்கான தீர்வினை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப் படாவிட்டால் மீண்டும் போராட்டத்தில் இறங்கப் போவதாக அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்தின் வேந்தராக முருந்தெட்டுவே ஆனந்த தேரரிடமிருந்து சான்றிதழை பெற மாணவர்கள் மறுப்பை தெரிவித்துள்ளனர். அரசாங்கத்துக்கு எதிரான தொடர்ச்சியான விமர்சனங்களை முன் வைத்த தேரர் பதவி ஒன்று வழங்கப்பட்ட பின்னர் அடங்கிய நிலைக்கு சென்றுள்ளார். ஆனால் இவரின் கைகளினால் தமக்கான சான்றிதழைப் பெற மாணவர்கள் மறுப்பு தெரிவித்தமை அரசாங்கத்துக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

1960காலப்பகுதியில் ஜப்பானுக்கு அடுத்த நிலையில் இருந்த இந்த நாடு இன்று சார்க் நாடுகளில் கடைசி நிலை நாடாக மாற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஆட்சியினை நடத்திய பெருமக்கள் இலங்கை தேசத்தை இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர். தனிச் சிங்களச் சட்டம் என்ற துரும்பை தனது அரசியல் இருப்புக்காக தூக்கிய எஸ். டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவின் முடிவால் சிறப்பு நிலையில் இருந்த தமிழ் நிர்வாகத்துறை அதிகாரிகள் நிர்வாக தளத்தில் இருந்து படிப்படியாக பின்


President Gotabaya Rajapaksa


Mahinda Rajapaksa


Basil Rajapaksa

நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால் நாடும் பின் நிலைக்கு போகத் தொடங்கியது. 1950இல் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இடதுசாரி கூட்டணி அரசாங்கம் தரப்படுத்தல் மற்றும் அரசியலமைப்பு ரீதியாக பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கு மட்டும் அரசியல் அந்தஸ்த்தை வழங்க முடிவெடுத்ததால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலைக்குச் சென்றனர். இதன் காரணமாக இந்த நாடு 30 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டு யுத்தத்தை எதிர் கொண்டது. யுத்தத்தை வென்று விட்டோம் என மார்தட்டும் அரச தரப்பினர் யுத்தத்திற்கான காரணிகளுக்கு இன்று வரை தீர்வு வழங்கும் நிலைக்கு வரவில்லை.

மீண்டும் தனிச்சிங்கள கட்டமைப்புடன் நாட்டை சுபீட்சத்திற்கு கொண்டு வரப் போகிறோம் என்று கூறியே தற்போதைய ஆட்சியாளர்கள் பதவியேற்றனர். இந்த நாட்டில் வாழும் தேசிய இனங்களை புறந்தள்ளி விட்டு ஒரு ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினர். இனவாதத்தின் உச்சநிலையில் செயற்பட்ட கலகொட ஞானசார தேரரை ஒரு நாடு ஒரு சட்ட மன்ற இலக்குக்கான செயலணிக்கு தலைவராகவும் நியமித்தனர். இத்தகைய செயற்பாடுகளை கண்டு இந்த நாட்டு மக்கள் மட்டமல்ல சர்வதேசமே வியப்பில் ஆழ்ந்தது. தற்போது நீதி அமைச்சர் அலி சப்ரியை பதவியில் இருந்து விலக வேண்டும் என ஞானசார தேரர் கூறியுள்ளார்.

இன்று பொது ஜன பெரமுனவின் பிரச்சார பீரங்கிகள் தமது குரலை உயர்த்திப் பேசும் நிலையை கைவிட்ட நிலை காணப்படுகிறது. அமைச்சர்களின் செயலாளர்களே மக்களுக்கு விளக்கங்களை முன்வைக்கின்றனர். பொது ஜன பெரமுனவின் அரசியல்வாதிகள் மக்களை சந்திப்பதை தவிர்த்து வருகின்றனர். இவர்கள் கருத்துக்களை கூற கூட திராணியற்றவர்களாக காணப்படுகின்றனர். எதிரணி அரசியல் சக்திகளின் செயற்பாடுகளில் ஒரு தேக்க நிலை காணப்படுகிறது. நாடும் மக்களும் மிக மோசமான யுகத்தில் வாழ்வை கழிக்கின்ற நிலையில் எதிரணியினரோ செயலின்மையுடன் வலம் வருகின்றனர். பாராளுமன்றத்தில் மட்டும் சில எதிர்ப்பு செயற்பாடுகளை காட்டும் இவர்கள் மோசமான நிலைக்கு எதிராக ஒன்றிணைந்த செயற்பாடுகளுக்கு இன்னமும் தயாரில்லாத நிலை தொடர்கின்றது. பிரதான எதிர் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி விளம்பரத்துக்காக சில கிராமங்களுக்கு சென்று நிவாரண வித்தைகளை காட்டும் செயற்பாடுகளிலேயே ஆர்வம் காட்டுகிறது. இக்கட்டான கட்டத்தில் இருக்கும் நாட்டை மீட்டெடுக்க கூடிய ஒரு வேலைத் திட்டத்தை நோக்கிய நகர்வில் அது தயாரில்லாத நிலையில் காணப்படுகிறது.

வடக்கு கிழக்கிலும் மக்கள் கஷ்டத்தை எதிர் நோக்குகின்றனர். தென்னிலங்கை மக்களும் வாழ முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இவை யாவற்றையும் ஒன்றிணைத்து ஒரு அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்கும் ஒரு அரசியல் கலாச்சாரத்தை நோக்கிய நகர்வு பூச்சிய நிலையிலேயே உள்ளது. தமிழ் முஸ்லிம் மலையக அரசியல் தலைமைகள் ஒரு புறமாகவும் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் வேறான நிலையிலும் அரசியல் உறவுகள் தொடர்கின்றன. இது ஆட்சியாளர்களுக்கு செய்யும் மகத்தான சேவையாகவே பார்க்கப்படுகிறது.

சீன தேசம் தமிழ் மக்கள் மீது காதல் கொண்டு தமது அக்கறையை வெளிபடுத்த முன் வந்துள்ளது. இது வரவேற்கத் தக்கதே. இலங்கைக்கான சீனத் தூதுவரின் மூன்று நாள் வட பகுதி விஜயம் இவர்களது எதிர்பார்ப்பை வெளிக்காட்டியுள்ளது. ஆனாலும் சீன தேசத்தவர் ஒரு உண்மையை புரிந்து கொள்வது சாலச் சிறந்ததாகும்.

இலங்கை தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் சீன தேசத்திடம் நிவாரணப் பொதியை எதிர்பார்க்கவில்லை. மாறாக அவர்கள் தமது கோரிக்கைகளை நிரல்படுத்தி போராடி வருகின்றனர். இலங்கை அரசாங்கம் புரிந்த மனித உரிமை மீறல்களுக்கான நீதி, வடக்கு கிழக்கில் இருந்து படையினரை குறைத்தல், நிலங்களை மீள கையளித்தல் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியல் தீர்வு என்ற அம்சங்களை வலியுறுத்தி போராடி வருகின்றனர். இவர்கள் இந்த போராட்டத்தை இந்திய தேசம் உட்பட அமெரிக்க உள்ளிட்ட மேற்குலகத்தினர் ஏற்று அதற்கான தீர்வை வலியுறுத்தி வருகின்றனர். பூகோள அரசியல் நலன்களுக்காக நாடுகள் பல நகர்வுகளை மேற்கொண்டு இருந்தாலும் தாராளவாத போக்கினை கைக் கொள்ளும் தேசங்கள் இலங்கை தமிழ் மக்கள் விடயத்தில் ஒரு நியாயமான நிலைப்பாட்டை கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால் தம்மை சோசலிச முகாமாக காட்டும் பிரிவினரான ரஷ்ய மற்றும் சீன முகாமில் இந்தத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிராகரித்து

கட்டுரையாளர்:
- நடராஜா ஜனகன் -

வருவதுடன் இலங்கை அரசாங்கத்துக்கு உறுதுணையாகவும் இருந்து வருகின்றனர். எனவே நிவாரணப் பொதியுடன் சென்ற சீனத் தூதுவரிடம் மிக வினயமாக வேண்டுவது என்னவென்றால் தமிழ் மக்கள் என்ன எதிர்பார்ப்பில் உள்ளனரோ அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற தயாராகுங்கள். இந்த நிலைக்கு சீன அரசாங்கம் தயாரானால் உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான தமிழ் மக்களின் ஆதரவு நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும்.

மீண்டும் தமிழ் தலைவர்கள் கிட்டத்தட்ட 12 அரசியல் கட்சிகள் தமிழ் பேசும் மக்கள் என்ற அளவில் தமக்கான நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து இந்திய அரசிடம் மகஜர் ஒன்றை கையளிக்கும் நிலைக்கு தயாராகி வருகின்றனர். இது வரவேற்கத்தக்க ஒரு செயற்பாடாகும்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்குள் மட்டும் சிறைப்பட்டிருந்த இவர்கள் அறைக்கு வெளியே வந்து ஒரு செயற்பாட்டை முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே. ஆனாலும் பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான போராட்ட நிகழ்வை வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மாத்திரமல்ல தென்னிலங்கை மக்களும் மிகுந்த எதிர்பார்ப்புடன் தொடர் போராட்டங்களை எதிர்பார்த்திருந்தனர்.

மக்களின் எதிர்பார்ப்புகள் யாவும் சிதறடிக்கப்பட்ட நிலையில் தமிழ் பேசும் மக்கள் படும் அவலங்கள் தொடர்பாக எத்தகைய போராட்டச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள விருப்பம் இல்லாதவர்களாக இந்த தமிழ் பேசும் தலைவர்கள் காணப்பட்டனர். இன்று இந்தியாவிடம் ஒரு முறைப்பாட்டை வழங்க இவர்கள் தயாராகி வருகின்றனர்.

இந்த செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. மேற்படி மகஜரை கையளித்து விட்டு மீண்டும் பாராளுமன்ற வளாகத்திற்குள் அடைக்கலம் தேடாமல் போராட்டகளத்தில் இருக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து பலமான மக்கள் எழுச்சிக்கு தயாராக வேண்டும் என்பதே சகலரது எதிர்பார்பாகும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
ஈழத்து -இந்தியக் கலைஞர்களோடு
ஈழநாடு 29வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2022
16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை

# தமிழர் மூலம் சீனாவுக்கு செக்



இலங்கையில் இருந்து சீனாவை வெளியேற்றுவது எப்படி என்று அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகள் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்தவாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் 2020 ஜனவரியில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி கொழும்புக்கு வந்திருந்தார். அப்போது அவர் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிநாட்டு சக்திகள் தலையீடு செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். அத்துடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினரான யாங் யீச்சியும் 2020இல் இலங்கைக்கு பயணம் மேற் கொண்டிருந்தார்.

அது போல சீன பாதுகாப்பு அமைச்சர் வெய் பெங் 2021 மே மாதம் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். பின்னர் மீண்டும் கடந்த ஆண்டு ஜூன் மாதம் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளவிருந்த போதும் தொற்றுப் பரவலினால் அந்தப் பயணம் தடைப்பட்டது.

இப்போது இருதரப்பு உறவுகள் சிக்கலானதொரு கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

ஏற்கனவே இலங்கையில் சீனா தனது காலடியை வலுவாகப் பதித்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கிலும் சீனா தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள நிலையில் தான் அவரது பயணம் இடம்பெறுகிறது.

வடக்கில் பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் மற்றும் நகரை அபிவிருத்தி செய்வது கௌதாரிமுனையில் காற்றாலை மின்சக்தி திட்டங்களில் முதலீடு செய்வது ஆகியவற்றுக்கு, சீனா விருப்பத்தை வெளிப்படுத்தியிருக்கும் நிலையில் கொழும்பிலும் யுகதனவி மின்திட்டத்தை கைப்பற்றுவதிலும் சீனா ஆர்வம் கொண்டுள்ளது.

யுகதனவி உடன்பாடு ஏற்கனவே அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள நிலையில் அந்த உடன்பாட்டை சவாலுக்குட்படுத்தி மூன்று அமைச்சர்கள் நீதி மன்றம் சென்றுள்ளனர்.

அந்த உடன்பாடு கைவிடப்பட்டால் சீனா அதற்காக போட்டியிடவுள்ளதாக பீஜிங்கிற்கான இலங்கைத் தூதுவர் பாலித கொகன்ன தெரிவித்திருக்கிறார். ஆக சீன வெளிவிவகார அமைச்சரின் பயணம் புதிய முதலீடுகளை கைப்பற்றுவதற்கான போட்டியை விரிவுபடுத்துவதாக இருக்கப் போகிறது என்பது உறுதியாகியிருக்கிறது.

சீனாவின் இப்போதைய ஆதிக்கத்தை அகற்றுவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இன்னும் வலுவாக காலூன்றுவதற்கான எத்தனங்களுடன் வரப்போ கிறார் சீன வெளிவிவகார அமைச்சர். இந்தநிலையில் தான் சீனாவா அமெரிக்கா இந்தியாவா என்ற இழுபறிப் போர் உருவாகியிருக்கிறது. இந்த இழுபறிப் போரில் தமிழர்கள் மையப் புள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் போலவே தெரிகிறது.

அண்மையில் அமெரிக்காவுக்கு மேற்கொண்டிருந்த பயணம் தொடர்பாக பெரும்பாலான தகவல்களை வெளியிடாமல் இருந்து வந்த கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த வாரம் தமிழக தொலைக்காட்சி விவாதத்தின் போது முக்கிய கருத்தினை முன் வைத்திருக்கின்றார். அமெரிக்க இராஜாங்கத் திணைக் கள அதிகாரிகளைச் சந்தித்த போது உங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாங்கள் உதவினால் சீனாவை இலங்கையில இருந்து அகற்றுவதில் உங்களின் பங்களிப்பு என்னவாக இருக்கும் என்று வெளிப்படையாகவே அவர்கள் கேட்டனர் என்று சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுவாக இராஜதந்திர உரையாடல்கள் இது போன்று வெளிப்ப டையானதாக இருப்பதில்லை. நாசூக்காகவே நடக்கும். அதற்கு மாறாக சுமந்திரனிடம் அமெரிக்க அதிகாரிகள் வெளிப்படையாகவே சீனாவை வெளியேற்றுவதற்கு எவ்வாறு உங்களால் உதவ முடியும் என்று கேட்டிருக்கிறார்கள். இது ஒரு பேரம் தான். தமிழர்களைப் பயன்படுத்தி இலங்கையில் சீனாவுக்கு "செக்" வைக்கும் சர்வதேச நகர்வு ஒன்றுக்கான அறிகுறிகள் வெளிப்படுகின்றன.

ஏற்கனவே சீனாவின் கடன்பொறி இராஜதந்திரத்துக்குள் அகப்பட்டுள்ள இலங்கை கடந்த வாரத்தில் மேலும் 1.5 பில்லின் டொலர்களை வெளிநாட்டு நாணயமாற்றுக் கடனைப் பெற்றுக் கொண்டதன் மூலம் மேலும் சிக்கிக் கொண்டுள்ளது. இந்தநிலையில் அமெரிக்க இந்தியக் கூட்டு இலங்கை அரசாங்கத்தை எவ்வாறு அணுகப் போகிறது தமிழர் தரப்பை வைத்து அதனை எவ்வாறு கையாளப் போகிறது? என இரண்டு கேள்விகள் இருக்கின்றன.

1980களில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளின் சிறகுக்குள் இருந்த போது இந்தியா தமிழர் தரப்பை வைத்து காய்களை நகர்த்தியது. தமிழ் அமைப்புகளுக்கு ஆயுதங்களையும் கொடுத்து பயிற்சிகளையும் வழங்கியது. அவர்களின் மூலம் நெருக்கடி கொடுத்துக் கொண்டிருந்த போது ஜே.ஆர் அரசாங்கம் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகளை சாட்டாக வைத்துக் கொண்டும் தென்னிலங்கையில் ஜே.வி.பி. கிளர்ச்சியினால் ஜே.ஆர். சந்தித்த நெருக்கடிகளைச் சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டும், அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் தலையீடு செய்தது இந்தியா.

அந்த தலையீட்டின் மூலம் அமெரிக்காவின் தலையீடுகள் தளம் அமைக்கும் கனவுக்கு இந்தியா ஆப்பு வைத்தது. அத்துடன் தமிழரின் ஆயுதப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் காரியத்தையும் இந்தியா முன்னெடுத்தது. அந்த முயற்சி ஆரம்பத்தில் வெற்றியளிக்காது போனாலும் 2009இல் இலங்கை இராணுவத்தைக் கொண்டே அதனைச் செய்தது. இப்போது அதே போன்றதொரு சூழல் உருவாகியிருக்கிறது.

ஆட்சியில் உள்ள ராஜபக்ஷ அரசுக்கும் சீனாவுக்கும் இடையில் உள்ள நெருக்கமும் சீனாவின் தலையீடுகளும் அமெரிக்காவையும் இந்தியாவையும் அதிருப்திக்குள்ளாக்கியிருக்கிறது.

ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பது போல இலங்கையை விட்டு சீனாவை வெளியேற்றி விட முடியாது. அது சாத்தியமற்றது. ஏனென்றால் அம்பாந்தோட்டை துறைமுகம் ஏற்கனவே சீனாவிடம் உள்ளது. 99 வருடங்களுக்கு அதனை யாராலும் அசைக்க முடியாது.

கொழும்பு துறைமுக நகரத்தையும் சீனாவே அமைக்கிறது. கொழும்பு துறை முகத்திலும் சீனா கொள்கலன் முனையம் ஒன்றை நிர்வகிக்கிறது. இவற்றையெல்லாம் விட்டு சீனாவைத் துரத்தியடிப்பது சாத்தியமில்லை. தமிழர் தரப்பு மட்டுமல்ல சிங்களத் தரப்புகள் இணங்கினாலும் சுலபமான காரியமல்ல.

ஒரு உரக் கப்பல் விவகாரத்தை வைத்தே இலங்கை அரசாங்கத்தை ஆட்டிப்படைக்கின்ற சீனா அவ்வாறு இலங்கையை விட்டு துரத்தப்பட்டால் என்ன செய்யும் எப்படி பதிலளிக்கும் அல்லது பதிலடி கொடுக்கும் என்று கற்பனை செய்வதே கடினமானது. சீனாவின் தலையீடுகளை குறைக்கலாம் அல்லது தவிர்க்கலாமே தவிர அதனை முழுமையாக அகற்ற முடியாது.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது கூட தற்காலிக தீர்வு தான் என்பதை 2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் அமெரிக்கா உணர்ந்து விட்டது. எனவே இலங்கை அரசாங்கத்தையும், சீனாவையும் வழிக்குக் கொண்டு வருவதற்கு தமிழர் தரப்பை பலப்படுத்துவது ஒரு உத்தியாக இருக்கலாம்.

தமிழர் தரப்பை பலப்படுத்துவது என்கின்ற போது ஆயுதங்களைக் கொடுத்து அவ்வாறான பலப்படுத்தலை மேற்கொள்ள முடியாது. ஆனால் ஆயுதப் போராட்ட காலத்தில் இறுதிக் கட்டப் போரின் போது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் போர்க் குற்றங்களுக்கு நீதியைக் கோருதல், பொறுப்புக்கூறலுக்கான அழுத்தங்களை அதிகரிக்க முடியும். ஏற்கனவே அதற்கான முன்னோடியாகவே ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஊடான நகர்வுகள் முன்னெடுக்கப் பட்டன. ஆனால் அவை மிகத் தீவிரமான அழுத்தங்கள் அல்ல. அதனை தீவிரப்படுத்தி கடுமையான அழுத்தங் களைக் கொடுப்பது ஒரு வழிமுறையாக இருக்கலாம். இன்னொன்று தமிழர் தரப்பின் அரசியல் உரிமை மற்றும் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை வலுப்படுத்தி அழுத்தங்களைக் கொடுப்பது. இந்த இரண்டு வழிமுறைகளுக்கு மாற்றான வேறு வழிகளையும் அமெரிக்கா கையாளலாம். இதில் தமிழர்கள் எப்படிப் பயன்படுத்தப்படுவார்கள் என்பது தான் கேள்வி.

கட்டுரையாளர்:
இந்தியாவில் இருந்து
கேணல் ஹரிஹரன்



தமிழர்கள் மீண்டும் கறிவேப்பிலையாக பயன்படுத்தப் படுவார்களாயின், ஆட்சி மாற்றத்துக்கோ அதிகார மாற்றத்துக்கோ கைகொடுப்பது புத்திசாலித்தனமல்ல. மாறாக தமிழரின் நியாயமான அபிலாசைகளையும் நிறைவேற்றிக் கொண்டு வல்லரசுகள் தமது தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளும் அளவுக்கு கண்ணியமான ஒரு கனவான் உடன்பாட்டுக்கு இணங்கினால் அதனை பற்றிக் கொள்வது உசிதமானது.

எவ்வாறாயினும் சீனாவை வெளியேற்றும் இலக்கில் அமெரிக்காவோ இந்தியாவோ வைக்கப் போகின்ற "செக்" மட்டும் முக்கியமல்ல, அதற்குப் பதிலாக சீனா எவ்வாறு காய்களை நகர்த்தப் போகிறது என்பதும் கூட இங்கு முக்கியமானது.

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)


ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# SHIVA DURGA ASTROLOGY CENTER






PRIVATE & CONFIDENTIAL



## PANDIT: KRISHNAM RAJU

**Solutions & Suggestions on:**

| | |
|---|---|
| Black Magic | Education, Family |
| Evil Spirits | Employment, Court |
| Jealousy | Husband & Wife |
| Health, Wealth | Children Problem |
| Business, Marriage | Business Prob. |
| Drinking Problem | Vasthu Prob |
| Love, Divorce | Real Estate |
| Visa Prob. | and all other Problems |

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், விசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஷ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

**An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection**

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

**437-213-3305**



AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

# கியூபா சுற்றுலா

ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும், வேறு நகரங்களிற்கும்.

2022 தை மாதம் முதல் 2022 ஆனி வரை

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு இந்த விலை.



| 3 STAR ★★★ | 3½ STAR | 4 STAR ★★★★ | 4½ STAR | 5 STAR ★★★★★ |
|---|---|---|---|---|
| REGUALR C$1,000 | REGUALR C$1,250.00 | REGUALR C$1,500.00 | REGUALR C$,750.00 | REGUALR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$1,750.00 |

கீழ்காணும் அனைத்திற்கும் விமானச்சீட்டு, தங்குமிடவசதி, விமான நிலையத்திற்கும், தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு (3 நேர உணவு) மதுபானம், குளிர்பானம், சூடுபானம்.

முன்பதிவும், முற்பணமும் 3 மாதத்திற்கு முன்பு அவசியம். HST இலக்கத்துடன் பற்றுச்சீட்டு உடன் வழங்கப்படும்.

25 Crouse Road, Unit 4078,
Toronto Ontario, M1R 5P8

மேலதிக விபரங்களுக்கு : Owner & Operator
திரு. ராதா பிரான்சிஸ்சேவியர்

E-mail : a1actour.com@gmail.com
Web : www.a1actour.com
F: Facebook.com / Allccountriestour

416 644 7273 416 857 5252

# இலங்கைத்தீவு இந்தியாவின் அயலவராகவும் நண்பராகவும் தொடர்ந்தும் இருக்குமா?

நாடுகளுக்கிடையிலான இராஜீக உறவில் அரசாங்கங்கள் மட்டுமன்றி தனிமனித நட்புகளும் உறவுகளும் நிறுவனங்களும் பங்களிப்புச் செய்யக் கூடியவையாக காணப்படுகின்றன. அந்த வகைக்குள்ளேயே இலங்கை தற்போதைய ஆட்சியாளரின் நெருக்கமான நண்பனாக இந்திய ஜனதாக் கட்சியின் தலைவரும் இந்திய அரசாங்கத்தில் அதிக செல்வாக்கு மிக்கவருமான சுப்பிரமணியம் சுவாமி காணப்படுகின்றார்.

இலங்கை இந்திய நட்பினை கட்டமைப்பதில் கனதியான நகர்வுகளை தென் இலங்கைக்காக செய்யும் ஒருவராக விளங்குகிறார். 2015இல் அதிக பிரயத்தனங்களை எடுத்து தோற்றுப் போனாலும் அவரது முயற்சி தற்போதைய ஆட்சியாளருக்கானதாகவே அமைந்திருந்தது. தென் இலங்கை உள்நாட்டிலும் பிராந்திய சர்வதேச மட்டத்திலும் நெருக்கடியை சந்திக்கும் போதெல்லாம் அயலவராக கை கொடுக்கும் நட்பராக சுவாமி விளங்குகிறதை அவதானிக்க முடிகிறது. இக்கட்டுரையும் இலங்கை இந்திய உறவின் போக்கில் நிலவும் யதார்த்தமான சூழலை தேடுவதாக அமையவுள்ளது.

நெருங்கிய நண்பராகவும் அயலவராகவும் இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருக்கும் என இலங்கைக்கான இந்திய தூதரகம் டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது. இம்மாத முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய இலங்கைக்கு நீண்ட கால மற்றும் மத்திய கால ஒத்துழைப்புகள் கிடைக்கவுள்ளதாக வருட இறுதி விருந்துபசாரத்தில் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் போது உணவு சுகாதார மருத்துவ பாதுகாப்பு எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் செலாவணி பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதென இந்திய உயர்ஸ்தானிகரின் டுவிட்டர் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் இலங்கைக்கு இந்தியாவால் பத்து பில்லியன் டொலர் கடனை வழங்குவதன் மூலம் சீனாவுக்கு ஒரு சகா கிடைப்பதைத் தடுக்கலாம் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடும் போது இந்து சமுத்திரத்தில் இந்தியா தனக்கு நீண்ட கால சகா ஒருவர் தேவையெனக் கருதினால் தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கடன் வழங்க வேண்டும் அல்லது சீனாவுக்கு இளைய சகா ஒருவர் கிடைப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். மோடி அரசாங்கம் பல வெளிவிவகாரக் கொள்கைளில் தோல்வியடைந்துள்ளது. இலங்கை இன்னொன்றாக இருக்க வேண்டாம் என தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மேற் குறித்த இரு வாதங்களும் அதிக முக்கியத்துவத்தை இலங்கை இந்திய உறவில் ஏற்படுத்தவுள்ளன. குறிப்பாக இலங்கையின் நிதி அமைச்சர் மீளவும் இந்தியாவுக்கு விஜயம் செய்யத் தயாராக உள்ள நிலையில் இந்தியா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளதை இந்தியத் தூதுவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இது இலங்கை இந்திய உறவை பலப்படுத்துவதுடன் சீனாவுக்கு எதிரான உபாயங்களை இந்திய இலங்கை உறவின் மூலம் வகுக்க வேண்டிய பக்கங்களை சுப்பிரமணியம் சுவாமி தனது டுவிட்டர் தளத்தில் தெரியப்படுத்தியுள்ளதையும் கவனத்தில் கொள்வது அவசியமானது. இவற்றை சற்று விரிவாக நோக்குவது தேவையாக உள்ளது.

முதலாவது தென் இலங்கை சீனாவை நெருக்கமான நட்பு நாடாக முன்னிறுத்திக் கொண்டு தெளிவான ஓர் அரசியலை நிகழ்த்தி வருகிறது. அத்தகைய அரசியல் மூலமே இந்தியாவை கையாண்டு வருகிறது. அதனை சுப்பிரமணியம் சுவாமி வெளிப்படையாக தெரிவித்துள்ளார். இலங்கையுடனான இந்திய சீன உறவானது பத்து பில்லியன் கடனிலேயே தங்கியுள்ள நிலை ஏற்பட்டு விட்டது. அதாவது கடன் கொடுத்தால் மட்டுமே இந்திய இலங்கை நட்புறவு சாத்தியமாகும் அல்லாது விட்டால் சீனா பக்கம் சாய்வதைத் தடுக்க முடியாது எனக் கூறும் நிலை ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் அத்தகைய வார்த்தையை வெளிப்படுத்த இந்திய அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் முன் வருவதே வேடிக்கையானதாக உள்ளது.



ஏற்கனவே இதே பகுதியில் பஸில் ராஜபக்ஷவின் இந்தியா நோக்கிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் தென் இலங்கை சீனா பக்கம் போகும் என்பதற்கான ஆதாரங்களை வெளிப்படுதியிருந்தது. அதனையே சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். அதாவது சுப்பிரமணியம் சுவாமிக்கூடாக தென் இலங்கை சரியான இராஜீக நகர்வை மேற் கொண்டுள்ளது. அடுத்து வரும் வாரங்களில் சீனா வெளியுறவு அமைச்சர் இலங்கை வருகைதரவுள்ள நிலையில் இத்தகைய செய்தி வெளியாகியுள்ளது.

இரண்டாவது இலங்கைக்கான இந்திய தூதுவரது செய்தி இலங்கை பக்கம் இந்தியா உள்ளது என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது. அதாவது இலங்கையின் நிதியமைச்சரால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்ற இந்தியா தயாராக உள்ளது என்பதையே அவரது டுவிட்டர் பக்கம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கையை கையாள முனைகிறது என்பது தெளிவாகவுள்ளது. இலங்கைத் தீவு புவிசார் அரசியல் ரீதியாக இந்தியாவின் நலன்களுக்குள் உட்பட்டதென்பதை கவனத்தில் கொண்டுள்ள வேண்டிய நிலையில் இந்தியாவின் நகர்வு அவசியமானது. சீன வெளியுறவு அமைச்சரின் வருகையின் முக்கியத்துவம் நிச்சயமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கான உடன்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவே அமையும். அதனை கையாளும் பொறுப்பு இந்தியத் தரப்புக்கே உரியது. இந்தியத் தரப்பு சீனாவின் நகர்வுக்கு முன்னர் செயல்பட வேண்டிய நிலைக்குள் உள்ளது. அதனை இந்திய தூதுவர் வெளிப்படுத்தியுள்ளதுடன் அவரது வார்த்தைகள் இராஜீக நோக்குடன் அமைந்துள்ளது.

மூன்றாவது இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவை கையாளுவது போல் சீனாவையும் இந்தியாவை முன்னிறுத்தி செயல்படுகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக இந்திய — சீன நலன்களுக்குள் அகப்பட்டுள்ள இலங்கைத் தீவினை மாறி மாறி முன்னிறுத்திக் கொண்டு அந்த நாடுகளிடம் பொருளாதார உதவிகளையும் அரசியல் ரீதியான நலன்களையும் அடைந்து கொள்கின்றனர். இந்தியா பஸில் ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்படுமாயின் சீனாவிடம் அத்தகைய தேவைகளை நிறைவு செய்ய தயாராகியுள்ளது. அதனை அடையும் ஒரு உத்தியாகவே சீனாவின் வெளியுறவு அமைச்சரது விஜயம் அமையவுள்ளது. சீனாவிடம் அந்த நோக்கம் இல்லாது விட்டாலும் தென் இலங்கை அரசியல் சக்திகள் அதனை பயன்படுத்திக் கொள்வார்கள். அதற்கான ஆரம்ப புள்ளியையே சுப்பிரமணியம் சுவாமி வெளிப்படுத்தியுள்ளார்.

நான்காவது சுப்பிரமணியம் சுவாமி தனது டுவிட்டர் பக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகள் பல தோல்வி கண்டுவ ிட்டதாகவும் அதனைப் போன்ற நிலை இலங்கைத் தீவிலும் ஏற்பட்டு விடக் கூடாது என குறிப்பிட்டுள்ளார். ஆனால் மோடி அரசாங்கத்தின்பிராந்திய வெளியுறவுக் கொள்கை சீனாவின் அணுகுமுறையால் நெருக்கடியை சந்தித்து வருவது யதார்த்தமானதே.

அதற்கு தனித்து மோடி அரசாங்கத்தை குறை கூறிவிட முடியாது. ஒரு நாட்டின் வெளியுறவு என்பது தொடரான செய்முறையாகும். அதனை உருவாக்கினால் மட்டும் போதூது. அதனைக் கடைப்பிடிக்கவும் செயல்வடிவம் கொடுக்கவும் தலைவர்கள் தேவை. சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்களுக்கும் அதில் பங்குண்டு. நரேந்திர மோடி அரசாங்கத்தின் பிராந்தியக் கொள்கையை விட சர்வதேச மட்டத்திலான வெளியுறவு ஆரோக்கியமானதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வெளியுறவு தோற்றுப் போகுமாக அமைந்தால் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் பாதிப்பினையே ஏற்படுத்தும். இலங்கைத்தீவு அதனை பலதடவை அனுபவித்துள்ளது. ஆனால் இந்தியத் தேசியத்தை நேசிக்கும் எவரும் சுவாமி போன்று முறையிட மாட்டார்கள். அதனை தமது செயல்பாடாக மேற்கொண்டு நகர்வுகளை வெற்றி கொள்ளவே முயலுவார்கள். இந்தியாவின் நலனுக்கு சேவையாற்றுவதை விட பிற தேசங்களுக்கு சேவை புரிவதாகவே சுவாமியின் கருத்துக்கள் காணப்படுகிறன.

எனவே இலங்கை இந்திய உறவானது இராஜீக உத்திகளுக்குள்ளால் நகர்த்தப்படுகிறது. பரஸ்பரம் இரு தரப்பும் அடுத்துவரும் வாய்ப்புக்களை நோக்கி செயல்பட்டுக் கொண்டுவருகின்றன. இந்தியா இலங்கையை தனது நலன்களுக்குள் இழுப்பதற்கும் இலங்கை இந்தியாவையும் சீனாவையும் கையாளுவதற்கும் முயன்று கொண்டிருக்கின்றது. ஆனால் ஈழத்தமிழ் அரசியலோ ஒருமைப்பாட்டை எட்ட முடியாது இழுபறிப்படுகிறது. எத்திசையில் இயங்குவதென தெரியாது குழப்பத்திற்குள் அகப்பட்டுள்ளது. "இவற்றுக்கொல்லாம் அறிவு தேவையில்லை" என்ற வாதமே மேலோங்கியுள்ளது.

**பேராசிரியர் K.T. கணேசலிங்கம்**


## வயோதிபத் தம்பதிகளைப் பராமரிக்க உடனடியாக ஆள் தேவை

**பிரம்டன் பகுதியில் சொந்த வீடொன்றில் இருக்கும் வயோதிபத் தம்பதிகளை காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை பராமரிப்பதற்கு ஒருவர் உடனடியாகத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு 647 213 3958**

# மஹிந்த ராஜபக்ஷாவை திருப்பதிக்கு அழைத்துச் சென்ற விமான உரிமையாளர் கணநாதன் என்ற தமிழர் யார்?

((8ம் பக்கத் தொடர்ச்சி) செல்ல வேண்டியிருந்தது. கணநாதன் தற்போது உகண்டாவை தளமாகக் கொண்ட வணிகத்தின் முக்கிய நபராக உள்ளார் மற்றும் ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களுடன் தொடர்பு களை நிறுவியுள்ளார். 35 ஆண்டுகளாக ஆபிரிக்காவில் வர்த்தகம் செய்து வரும் தொழிலதிபருக்கு உகண்டா, எத்தியோப்பியா, கென்யா, செனகல், சுடான், கெமரூன், மொரிடானியா ஆகிய நாடுகளின் தலைவர்களை சந்திக் கும் வாய்ப்பு கிடைத்தது.

உகண்டாவுக்குச் சென்ற அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோட்டபாய ராஜபக்சவை ககுடா முசெவேனி உகாண்டா ஜனாதிபதி வரவேற்றார். அப்போது ஜெனிவாவில் நடந்த மனித உரிமை கவுன்சிலில் இந்தியாவும் இலங்கைக்கு எதிராக வாக்களித்தது. ஆனால் இந்த எட்டு ஆபிரிக்க நாடுகளில் ஐந்து நாடு களும் வாக்களிப்பதை இலங்கையால் தடுக்க முடிந் தது. அந்த நாட்டுத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார் இந்தத் தமிழ் வர்த்தகர். ஜெனிவா தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்க கென்யா உட்பட மூன்று நாடு களையும் கணநாதன் தூண்டினார்.

எனினும் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் வருகை யுடன் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீர உகண்டாவில் உள்ள தூதரகத்தை மூடி விட்டார். இதற்குக் காரணம், இடி அமீன் போன்ற ஒருவர் கடந்த காலத்தில் அரசை விசாரித்து வந்தார். ஆனால் உண்மையான காரணம் கணநாதனின் தாக்கத்தில் உகண்டா ஊடாக இலங்கைக்கு எதிராக ஆபிரிக்க நாடுகள் வாக்களித்தன. மங்கள வெளிவிவ கார அமைச்சராக இருந்து உகண்டா தூதரகத்தை மூடிய போதிலும், அந்த உறவுகளை நீட்டிக்க ரணில் திட்டமிட்டார். கணநாதனை உகண்டாவின் கன்சல் ஜெனரலாக ரணில் நியமித்தார். ரணில் வழங்கிய பதவியை மஹிந்த ராஜபக்சவின் அனுமதியுடன் கண நாதன் ஏற்றுக் கொண்டார். 2016ஆம் ஆண்டு உகண்டாவின் ஜனாதிபதியாக ஜனாதிபதி ககுடா முசெவேனி மீண்டும் தெரிவு செய்யப்பட்ட பின்னர், உகண்டாவிற்கு விஜயம் செய்யுமாறு மஹிந்த ராஜ பக்ஷ அழைக்கப்பட்டார். கணநாதனின் அதிகாரம் மற்றும் ஆபிரிக்கத் தொடர்புகள் காரணமாக எதிர்க் கட்சித் தலைவர் கூட இல்லாத வெறும் நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தவை உகண்டா அப்போது அழைத்தது. ஆபிரிக்க நாடுகளில் மட்டுமின்றி வத்திக் கானிலும் தனது கதவுகளைத் திறக்கிறார் வேலுப் பிள்ளை கணநாதன்.

பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் கத்தோலிக்கர்கள் உள்ளனர். கத்தோலிக்க நாடுகளின் பேராயர்கள் வத்திக் கானுக்கு நேரடியாக பொறுப்புக் கூற வேண்டியவர்கள். ஆப்பிரிக்காவின் பேராயருக்கு நெருக்கமான கண நாதன், வத்திக்கானுடனும் தொடர்புகளைப் பேணி வருகிறார். ஆகவே, ஆப்பிரிக்க நாட்டுத் தலைவர்களு க்குத் தன் கரத்தை நீட்டிய போப்பின் ஆசிர்வதிக்கப் பட்ட கரங்கள் கணநாதனுக்கு உண்டு. தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன் கணநாதன் கென்யா வுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டு உகண்டாவில் உள்ள துணைத் தூதரகத்தை கென்ய தூதரகத்திடம் ஒப்படைத்தார்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களைக் கொண்ட விதுலங்கா, அக்பர் பிரதர்ஸ், வி.எஸ். கண நாதன் ஹைடோ மற்றும் MAS க்கு ஆப்பிரிக்க நாடு களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை தொட ங்க வழி வகுத்தார்.

இந்திய தொழிலதிபர்களும் ஆப்பிரிக்க நாடுகளில் பல் வேறு தொழில்களில் முதலீடு செய்து கொண்டிருந்த நேரத்தில் கணநாதன் உகண்டாவில் தனது தொழி லைத் தொடங்கினார். ஒரு தமிழ் குடும்பத்தில் பிறந்த கணநாதன், இந்தியாவில் உள்ள இந்த முதலீட்டாளர் களிடமிருந்து கிட்டத்தட்ட பிரித்தறிய முடியாதவராக இருந்தார்.

இந்திய கனிம வணிகத்தில் ஈடுபட்டுள்ள இந்திய தொழிலதிபருக்கு ஜெட் விமானத்தை முன்பதிவு செய்ய முடிந்ததாக கனநாதன் கூறுகிறார். இலங்கை யின் பண்டாரவளையில் பிறந்த கணநாதன், கடந்த 30 ஆண்டுகளாக உகாண்டாவில் வசித்து வந்தாலும், திருப்பதி கடவுளிடம் மகிந்த ராஜபக்சவை செல்ல வற்புறுத்துவது கணநாதன் தான்.

நன்றி:-- Aruna epaper-

# தமிழர் - முஸ்லிம் ஒற்றுமை செயல் வடிவம் காண வேண்டும்

(5ம் பக்கத் தொடர்ச்சி) இரண்டாந்தரப் பிரஜைகளாக்கி பெரும்பான்மை இனத்து க்குக் குற்றேவல் புரியும் இனங்களாக்குவதே பேரினவாதிகளின் ஒரே இலட்சியம். இன்றுள்ள முஸ் லிம் தலைமைகளோ வழமை போன்று யாருக்கு வால் பிடித்தால் தமக்குப் பதவியும் பணமும் கிட்டும் என்ப தையே கொள்கையாகக் கொண்டு சமூகத்தையே விலைபேசத் தயாராக உள்ளன.

இந்த வியாபார அரசியலால் முஸ்லிம்கள் ஓர் அடிமை இனமாக மாறுவதற்கு பாதை அமைக்கப்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் முஸ்லிம் தலைமைகள் ஒன்றிணை ந்து ஏதேனும் உருப்படியான ஓர் உடன் பாட்டுக்கு வரமுடியுமா என்பது சந்தேகம். அப்படியானால் இதற்கொரு மாற்று வழியுண்டா? நிச்சயம் உண்டு. அந்த வழி இரு இனங்களினதும் சிவில் அமைப்புகளிலிருந்து உருவாக வேண்டும். அது இரு சமூகங்களினதும் அடிமட்டத்திலிருந்து தோன்ற வேண்டும். இன்றைய முஸ்லிம் சமூகத்தில் முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு கணிசமான அளவுக்கு ஆண்களும் பெண்களும் கலந்த ஒரு புத்திஜீவிகள் வர்க்கம் வளர்ந்துள்ளது. இந்த வர்க்கத் திடம் சமூகவிழிப்பும் எதிர்காலம்பற்றிய சிந்தனையும் தமிழ்பற்றும் தியாக உணர்வும் மலர்ந்துள்ளதை உணர முடிகின்றது. தமிழரின் சிவில் அமைப்புகள் இந்த வர்க்கத்துடன் கைகோர்த்து இரு இனங் களையும் சமநிலையில் வைத்துத் தயாரிக்கப்பட்ட ஓர் உடன் பாட்டை அரசியல் தலைமைகளிடம் கையளித்து அதன் அடிப்படையில் 13ஆம் திருத்தத்துக்கான போராட்டத்தை வழிநடத்திச் செல்ல வேண்டும். இதனை காலங் கடந்த சிந்தனை என்று ஒதுக்கி விடா மல் இப்போதாவது அதற்கொரு சந்தர்ப்பத்தை வழங்கி னாலென்ன?

**கலாநிதி அமீரலி**

# பிரான்ஸில் தடுப்பூசியைப் புறக்கணித்த இரட்டையர்களுக்கு நேர்ந்த கதி!



(14ம் பக்கத் தொடர்ச்சி) குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டனர். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி புசஉைாமய டிசம்பர் 28ஆம் திகதி இறந்தார். ஆறு நாட்கள் கழித்து அதாவது ஜனவரி 3ஆம் திகதி அவரது சகோதரர் Igor Bogdanoff என்பவரும் பிரான்சில் உள்ள Georges-Pompidou மருத்துவ மனையில் இறந்துள்ளார்.

இருவரின் இறப்புக்கான காரணத்தை அவர்களது உறவினர்கள் வெளிப்படு த்தவில்லை என்றாலும் அவர்களது வழக்கறிஞர் Edouard de Lamaze இருவரின் மரணத்திற்கு காரணம் COVID 19 என்பதை உறுதியாக தெரி வித்துள்ளார். 72 வயதான இருவரும் கொரோனா தடுப்பூசி செலுத்தி கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# யாரையும் விலக்கி விட்டு வரைவில்

(3ம் பக்கத் தொடர்ச்சி) கேள்விகளுக்கு பதிலளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது, அவர் மேலும் கூறுகையில் அனைத்து கட்சி களும் இணைந்து தயாரித்த வரைவை தமிழ் அரசுக் கட்சி முற்றாக நிராகரிப்ப தாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா இன்னும் ஓரிரு நாட்கள் பிந்தினாலும் கூட இறுதி வரைவை தயாரித்து அனைவரும் கையொப்ப மிட்டு இந்தியப்பிரதமருக்கு அனுப்பு வோம் என்று உறுதிமொழி அளித்துள் ளார். எனவே இந்த விடயத்தில் யார் கையொப்பமிடுவது, யாரை தவிர்ப்பது, யார் விலகிக்கொள்வார்கள் என்பது இன்னும் ஓரிரு நாட்களில் தெரியவரும். ஆயினும், தமிழீழ விடுதலை இயக்கம் எடுத்த முயற்சியை ஒருபோதும் கை விடப் போவதில்லை. இந்த முயற்சியில் இருந்து யாராவது பின்வாங்க விரும்பி னால் அல்லது கையொப்பமிட மறுத் தால் அது யாராக இருந்தாலும் அவர் களை விலக்கி வைத்து விட்டு இந்த வரைவை கையொப்பம் இட்டு அனுப்பு வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய் வோம்.

வார்த்தை பிரயோகங்களை சாட்டாக வைத்துக்கொண்டு தமிழ் அரசுக் கட்சி ரெலோ எடுத்த முடிவுக்குப் பின்னால் நாங்கள் செல்வதா என்ற சிறுபிள்ளைத் தனமான அல்லது தமிழ் மக்களை ஏமாற்ற நினைக்கின்ற இந்த செயல் பாட்டை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவு தான் 13ஆவது திருத்தம். ஆகவே, ஒன்றுக்கொன்று முடிச்சுப் போட்டு அது வேறு இதுவேறு, தலைப்பு வேறு, வார்த்தை பிரயோகங்கள் வேறு என்று சொல்வது சிறுபிள்ளைத் தனமானது. இந்தியாவின் பங்களிப்பில்லா மல் எமது அரசியல் ரீதியான பிரச்சனை க்கு நிச்சயமாக நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கப் போவதில்லை. அதை உணர்ந்து அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் செயல்பட வேண்டும்.

அந்தவகையிலேயே இந்த முயற்சியை எடுத்துள்ளோம் இது நிச்சயம் வெற்றி பெறும். இந்த விடயத்தில் எந்த ஆலோ சனையையும் இந்தியாவிடமிருந்து நாம் பெறவில்லை. இந்தியா எமக்கு எந்தவித அழுத்தங்களையும் வழங்கவில்லை. ஆனால், நாம் பாதிக்கப்பட்ட இனம் என்ற வகையில் கடந்த காலங்களில் அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு வழியிலோ எமக்கு முழுமையான ஒத்து ழைப்பை வழங்கினார்கள் என்ற ரீதியில், அவர்களால் கொண்டு வரப்பட்ட சர்வ தேச ஒப்பந்தம் என்ற ரீதியில் அழுத்த ங்கள் என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் விடுதலைக்காக செய்கின்ற பெரும் கைங்கரியமாக இதனை பார்க் கிறோம் - என்றார்.

# கனடாவில் அதிகம் சம்பாதிக்கும் புலம்பெர்ந்தோர்

கனடாவில் புதிதாக நிரந்தர வதிவிட உரிமம் பெற்ற புலம்பெயர்ந்தோரே அதிகம் பணம் சம்பாதிப்பதாக கனேடிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அந்த ஆய்வில், 2018இல் கனடாவில் நிரந்தர வதிவிட உரிமம் பெற்றவர்கள், 2019ஆம் ஆண்டில் சராசரியாக 31,900 கனேடிய டொலர்கள் ஊதியம் பெற்றதும், 1981க்குப் பிறகு, அனைத்துப் பிரிவு புலம்பெயர்ந்தோரிலும் அதிக ஊதியம் பெற்றவர்கள் அவர்கள் தான் என்பதும் தெரியவந்துள்ளது. பல பிரிவு புலம்பெயர்ந்த பணியாளர்களில், கனடாவில் நிரந்தர வதிவிட உரிமம் பெறும் முன் கனடாவில் கல்வி கற்றவர் களும், கனேடிய பணி அனுபவம் கொண்டவர்களும், நிரந்தர வாழிட உரிமம் பெற்று பணியில் இணைந்து ஒரு ஆண்டிலேயே நல்ல ஊதியம் பெற்று ள்ளார்கள் என்பதும் அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

2018இல் கனடாவுக்கு வந்தவர்களில், கனடாவில் கல்வியும் கற்று, கனேடிய பணி அனுபவமும் பெற்றிருந்தவர்கள், அடுத்த ஆண்டிலேயே 44,600 கனேடிய டொலர்களை ஊதியமாகப் பெற்றுள்ளார்கள். விடயம் என்னவென்றால், இந்த தொகை, கனடாவில் பிறந்தவர்கள் வாங்கிய ஊதியத்தைவிட அதிகம் என்பதா கும். நிரந்தர வாழிட உரிமம் பெறும் முன் கனேடிய பணி அனுபவம் மட்டும் கொண்டவர்கள், 2019ஆம் ஆண்டில் 39,300 டொலர்கள் ஊதியம் பெற்ற நிலை யில் கனடாவில் கல்வி கற்ற அனுபவம் மட்டுமே கொண்டவர்கள், 2019இல் 15,100 டொலர்கள் மட்டுமே ஊதியம் பெற்றுள்ளார்கள். இதிலிருந்து, கனடாவில் நல்ல ஊதியம் பெறுவதற்கு, கனேடிய கல்வி மற்றும் பணி அனுபவம் எவ்வளவு அவசியம் என்பது நன்கு புலனாகிறது.

# தேர்தல் ஆயுதமாக மாறுகிறதா தமிழ்மொழி?

நாமக்கல் கவிஞர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை எழுதிய “நீராருங் கடலுடுத்த..“ எனத் தொடங்கும் தமிழ்தாய் வாழ்த்து பாடலை தமிழக அரசின் பாடலாக அதிகாரப்பூர்வமாக அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசாணை வெளியிட்டிருக்கிறார். இதன் மூலம் அனைத்து அரச நிகழ்ச்சிகளிலும் இனி தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் இசைக்கப்படும். அத்துடன் இந்தப்பாடல் இசைக்கப்படும் போது இதற்குரிய மரியாதையையும் வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இது மறைமுகமாக தேசிய கீதத்திற்கு இணையான பாடலாக அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாக தமிழ் ஆர்வலர்களும் தமிழறிஞர்களும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்கள். இதன் மூலம் திராவிட கட்சி ஆளும் மாநிலமான தமிழகம் தமிழ் மொழியை தங்களின் வலிமைமிக்க பாதுகாப்பு கவசமாகவும் பா.ஜ.க.விற்கு எதிரான தேர்தல் ஆயுதமாகவும் பயன்படுத்த திட்டமிட்டிருப்பது தெரிய வருகிறது.

தமிழ்த் தாய் வாழ்த்து பாடலுக்கு தீவிர இந்துத்துவ அடையாளத்துடன் வளையவரும் மடாதிபதிகள் எழுந்து நின்று உரிய மரியாதையை வழங்குவதில்லை என்ற தமிழறிஞர்களின் குற்றச்சாட்டிற்கு தமிழக அரசு உரிய நிவாரணத்தை வழங்கியிருக்கிறது. மேலும்



இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை தெரிவித்திருந்த கருத்தின் அடிப்படையிலும் இந்த உத்தரவு அமையப் பெற்றதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தற்போதைய மத்திய அரசு இந்துத்துவாவிற்கும் இந்தி மொழிக்கும் பாரிய முக்கியத்துவம் வழங்கி வருவதால், அதற்கு பதிலடியாக இத்தகைய அதிரடி நடவடிக்கையை மு.க. ஸ்டாலின் மேற் கொண்டிருக்கிறார் என்றும் தமிழகத்தை சார்ந்த மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் வினா எழுப்பினால் அதற்கு அவர்கள் ஆங்கிலத்தில் பதிலளிக்காமல் வலிந்து இந்தியில் மட்டுமே பதிலளிப்பதால் அதற்கு மாற்றாக இப்படி ஒரு நடவடிக்கையை மு.க.ஸ்டாலின் மேற் கொண்டதை பாராட்டுவதாகவும் தமிழறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இதே தருணத்தில் மத்திய அரசு தன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ற வகையில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதும், வேகமாக அதனை நடைமுறைப்படுத்த முயல்வதும் பிறகு தேர்தல் அரசியல் காரணங்களுக்காக திரும்பப் பெறுவதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறது. புதிய வேளாண் சட்டங்கள், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370 ஆவது சட்டப்பிரிவு நீக்க திருத்தச் சட்ட மசோதா என்று பல்வேறு சட்ட மூலங்களை விரைவாக எந்தவித விவாதமுமின்றி குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றுவதை தன்னுடைய பெரும்பான்மை பாராளுமன்ற அரசியல் உத்தியாகவே கையாள்கிறது.

இந்த வகையில் தற்போது தேர்தலில் நான்கு புதிய திருத்தங்களை மேற் கொள்ளும் சட்டமூலம் இதேபாணியில் மக்களவையில் அறிமுகப்படுத்தி நிறைவேற்றியிருக்கிறது. இது தொடர்பாக எதிர்க் கட்சிகள் மறுப்பும் எதிர்ப்பும் தெரிவித்ததையும் கண்டு கொள்ளாமல் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றியிருக்கிறது. இந்திய தேர்தல் ஜனநாயத்தின் மீது அக்கறைக் கொண்டிருக்கும் சில சமூக செயற்பாட்டாளர்கள், இந்த சட்டம் நிறைவேறினால் சுதந்திரமாக செயல்பட உறுதியளிக்கப்பட்டிருக்கும் இந்திய தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளிலும் தேர்தல் நடவடிக்கைகளிலும் அரசின் தலையீடு மறைமுகமாவும் நேர்முகமாகவும் இருக்கும். இதன் மூலம் தேர்தல் நடைமுறையில் அரசின் குறுக்கீடு தவிர்க்க முடியாத தாகி விடும் என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அத்துடன் இந்த தேர்தல் சீர்திருத்தம், தம்மை ஆள்வோரைத் தெரிவு செய்ய வாக்குரிமைப் பெற்றிருக்கும் இந்திய ஜனநாயகத்தின் அடிப்படை தூணாகத் திகழும் வாக்காளர்கள் மீது வலுக் கட்டாயமாக திணிக்கப்பட்டதாகி விடும் என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தை அறி முகப்படுத்தியிருக்கும் மத்திய அரசு “தேர்தலில் போலி வாக்காளர்களை கண்டறியவும் கள்ள வாக்குகள் பதிவாகுவதைத் தடுக்கவும் அறி முகப்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவித்திருக்கிறது.

அண்மையில் புதுவையில் நடைபெற்ற சட்டமன்ற பொது தேர்தலின்போது மத்தியில் ஆளும் பா.ஜ.க.வினர் புதுவை மக்களின் ஆதார் விவரங்களை ஆதார் ஆணையத்திடமிருந்து அதிகார துஷ்பிரயோகம் மூலம் பெற்றுக் கொண்டு அதற் கேற்ப வாக்காளர்களை இனம் பிரித்து, மதம் பிரித்து பிரசாரத்திற்காக பயன்படுத்திக் கொண்டனர் என்ற குற்றச்சாட்டு பதிவாகியிருக்கிறது.

இந்நிலையில் வாக்காளர் அட்டையுடன் அடையாள அட்டை எண் விவரங்கள் இணைக்கப்படுவது எதிர்காலங்களில் தேர்தலின் போது பா.ஜ.க. மத ரீதியாக பாகுபாடு மற்றும் வெறுப்பு அரசியல் பிரசாரத்தை முன்னெடுக்கக் கூடும். மேலும் வேறு சிலர் சிறுபான்மையினரின் வாக்குகள் விவரத்தை துல்லியமாக அவதானித்து அதனை வாக்காளர் பதிவிலிருந்து விலக்கவும், நீக்கவும் முடியும். இதன் காரணமாக பா.ஜ.க. சுதந்திரமான தன்னாட்சி பெற்ற தேர்தல் ஆணையத்தின் பணிகளில் குறுக்கிட்டு தமக்கு ஆதரவாக திசை திருப்புகிறது. புதிய வேளாண் சட்டங்களை அரசியல் காரணங்களுக்காக திரும்பப் பெற்றதைப் போல் தேர்தல் தோல் விக்குப் பிறகு இந்த அவசர சட்டங்களையும் பா.ஜ.க. திரும்பப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

“ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஊழலில் திளைத்த அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது இலஞ்ச ஊழல் புகார் பதிவு செய்து அவர்களை சிறையில் தள்ளுவேன்“ என்று வாக்குறுதி அளித்த தி.மு.க. தலைவர் ஸ்டாலின், வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக இலஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை நடத்திய முன்னாள் அமைச்சர்களான விஜயபாஸ்கர், எம்.ஆர் விஜயபாஸ்கர், வீரமணி, வேலுமணி, தங்கமணி என்று யாரையும் சிறைக்கு அனுப்பாமல் அவர்களுடன் மறைமுகமாக கூட்டணி அமைத்து மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மௌனம் காப்பது ஏன்? இவ்விடயத்தில் குறிப்பாக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி விடயத்தில் தேர்தல் தருணத்தின் போது ஸ்டாலின் பகிரங்கமாக அவர் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று தெரிவித்தார். ஆனால் அவர் மீது இலஞ்ச ஊழல் தொடர்பாக எந்த வழக்கையும் பதிவு செய்யாது அது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்காது 30 இலட்சம் ரூபா மோசடி செய்த வழக்கில் அவரைத் தேடப்படும் குற்றவாளியாக அறிவித்து தனிப்படை அமைத்து அவரைத் தேடி கைது செய்யப் போவ தாக அறிவித்திருப்பது கண்துடைப்பு நடவடிக்கையே.

முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜி விடயத்தில் ஸ்டாலின் மத்திய அரசின் மறைமுக வாய்மொழி உத்தரவிற்கு கட்டுப்பட்டு எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளாதிருக்கிறார். இது நாளடைவில் அவருடைய தொடர் நடவடிக்கைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால் எதிர்க் கட்சித் தலைவரான எடப்பாடி பழனிச்சாமி சொல்வதைப் போல் “தி.மு.க. அரசு ஒரு பொம்மை அரசு“ என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ள நேரிடும். இதனால் ஊழல் புரிந்த முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இதனை உள்ளாட்சித் தேர்தல் தருணத்தில் எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வின் தொண்டர்களின் மன உறுதியைக் குலைக்கும் நடவடிக்கையாக அமையாமல் மக்களின் மீது நம்பிக்கை கொண்ட அரசாக இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் கோரிக்கை. தமிழ்தாய் வாழ்த்து பாடலை அரசு பாடலாக அறிவித்து கம்பீரம் காட்டிய ஸ்டாலினுக்கு “இட ஒதிக்கீடு அதிகமாக நடைமுறைப்படுத்தப்படும் மாநிலமாக தமிழகம் இருக்கிறது“ என்று உச்சநீதிமன்ற நீதியரசர் பாராட்டு உற்சாகமளிக்கும். என்றாலும் அவர் தொடர்ந்து அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கையை பரிசீலித்து ஊழல் செய்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனைசெய்தால் ஸ்டாலின் உண்மையில் மக்களின் முதல்வராக கொண்டாடப்படுவார்.

# புதிய ஆண்டைத் திட்டமிடுவது

(15ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால் அதை ஒரு முழு நேர வேலையாக செய்வதற்கு சிவில் சமூகங்களிடம் வளமும் இல்லை, பலமும் இல்லை. அதாவது சிவில் சமூகங்கள் ஒரு பலமான அதிகார மையமாக இல்லை. அவை சொன்னால் தமிழ் கட்சிகள் கேட்க வேண்டும் எனுமளவுக்கு நிலைமைகள் வளரவில்லை. மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ அரசியலை வழிநடத்தவல்ல மக்கள் இயக்கம் எதுவுமில்லை. தனிய தேர்தல் மைய கட்சிகள் மட்டும் தான் உண்டு என்ற வறுமையின் அடிப்படையிலும் சிந்திக்க வேண்டும்.


எனவே மேற்கண்ட கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் மிகத் துலக்கமான முடிவுகளுக்கு நாம் வரலாம். கடந்த ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட மொத்தம் நான்கு வெளிவிவகார அணுகுமுறைகளும் நமக்கு உணர்த்துவது எதை என்றால் தேர்தல் தோல்விகளும் ஏகபோகம் இழக்கப்பட்டமையும் தான் மேற்கண்ட ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு அடிப்படைக் காரணம். அதேசமயம் கட்சிகளால் முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைப்பு முயற்சிகள் முழுமையானவை அல்ல. ஏனெனில் வெளிவிவகாரம் எனப்படுவது கட்சி முரண்பாடுகளை பிரதிபலிக்கும் ஒரு களம் அல்ல. அது அரசற்ற தேசிய இனங்களைப் பொறுத்தவரை தேச நிர்மாணத்தின் தவிர்க்கப்படவியலாத ஒரு பகுதி. அந்த அடிப்படையில் அது கட்சிகளுக்கிடையிலான போட்டியின் விளைவாகவோ அல்லது தனி ஓட்டங்களாகவோ அல்லது குறுக்கோட்டங்களாகவோ இருக்கக்கூடாது. அதைக் கட்சிகள் மட்டும் செய்யக்கூடாது. மக்கள் பிரதிநிதிகள், நிபுணர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் போன்ற எல்லாத் தரப்புக்களையும் ஒன்றிணைக்கும் ஒரு வெளிவிவகாரக் குழு உருவாக்கப்பட வேண்டும். தாயகம், புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம், தமிழகம் ஆகிய மூன்று பரப்புகளில் இருந்தும் பொருத்தமான செயற்பாட்டு ஆளுமைகள் அதில் இணைக்கப்பட வேண்டும்.

எனவே தொகுத்துப் பார்த்தால் தமிழ்மக்களின் வெளிவிவகார அணுகுமுறைகளைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் துலக்கமான மூன்று ஒருங்கிணைந்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றிலிருந்து கற்றுக் கொண்டவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டிலாவது தமிழ்மக்கள் மத்தியில் உள்ள ஆர்வம் உள்ள அனைவரும் ஒரு பொதுவான வெளிவிவகார கட்டமைப்பை குறித்து சிந்தித்து செயற்பட்டால்தான் புதிய ஆண்டு தமிழ் மக்களுக்கு வெற்றி ஆண்டாக அமையும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் வேலைபளு குறைந்து வீண் அலைச்சலும் குறையும். ஆனால் பணியை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்னை தலை தூக்கி பின்னர் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகளால் செலவும் ஏற்படும். உறவினர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு தடைபட்ட காரியங்களில் தடைநீங்கி சாதகமாக நடக்கும்.




ரிஷபராசி அன்பர்களே! வீண்செலவுகள் குறையும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். வர வேண்டிய பணம் வந்துசேரும். சாமர்த்தியமான பேச்சினால் காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய ஆர்டர்கள் வருவது அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி சுமுகமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பெண்கள் திறமையான பேச்சின் மூலம் காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். ஏழை எளியவர்களுக்குத் தான தருமம் செய்வது நன்மை பயக்கும்.





மிதுனராசி அன்பர்களே! காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வீண் கவலைகள் நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் விருத்தியடையும். தடைபட்ட நிதி உதவி கிடைக்கும். வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகஸ்தர்களுக்கு வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். சிலர் பழைய வீட்டை புதுப்பிப்பார்கள். வாகனம் மூலம் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகள் சந்தோஷமாக காணப்படுவர். குடும்பத்தினருடன் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். குடும்பம் சார்ந்த விஷயங்களில் கலந்துரையாடும் போது மிக கவனம் தேவை.




கடகராசி அன்பர்களே! சுபச்செலவு உண்டாகும். முயற்சிக்கு பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவற்றை புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். சிலருக்கு பதவி உயர்வும் கிடைக்கும். இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் கஷ்டம், சுகம் இரண்டும் ஏற்படலாம். பெண்களுக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். வெளிப்படும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நடந்து முடியும். இறை தரிசனம் செய்யவும்.





சிம்மராசி அன்பர்களே! எதிலும் அவசரப்படாமல் நிதானமாக முடிவு எடுப்பது அவசியம். மனதில் இருந்த குழப்பம், கவலை நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறுவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தயக்கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். பிள்ளைகளிடம் கவனமாக பேசுவது நல்லது. உறவினர்கள் வருகை இருக்கும். சொத்துக்கள் வாங்க எடுக்கும் முயற்சிகள் தாமதப்படும். பெண்கள் எடுத்த முடிவை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பர்.





கன்னி ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். எதையும் மனோ தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக்கும். தொழில்கள், வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு கீழ்நிலையில் உள்ளவர்களால் லாபம் உண்டாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப்பர். குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி, மகிழ்ச்சியான நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையில் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பளிப்பர். பெண்கள் எதிலும் மிகவும் கவனமாக ஈடுபடுவது நன்மை தரும். மாணவர்கள் பாடங்களில் சந்தேகம் கேட்பதற்கு தயக்கம் காட்டாமல் இருப்பது வெற்றிக்கு உதவும்.







துலாம்ராசி அன்பர்களே! துணிச்சலாக எதையும் செய்து முடித்து காரிய வெற்றி அடைவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். பணவரத்து கூடும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். கடன் பாக்கிகள் வசூலாகும். உத்யோகஸ்தர்களுக்கு பணி தொடர்பான கஷ்டங்கள் குறையும். கணவன், மனைவிக்கிடையில் மனம்விட்டு பேசி எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகள் செயல்கள் பெருமைப்படத்தக்கதாக அமையும். பெண்களுக்கு கடிதம் மூலம் வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். கஷ்டங்கள் குறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! தேவையற்ற கவலைகள் நீங்கும். சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். உங்களை பற்றி விமர்சனம் செய்தவர்கள் அதனை விட்டு விடுவார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்சனை தீரும். ஆர்டர் பிடிப்பதில் இருந்த கஷ்டம் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பார்கள். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். பாதியில் நின்ற வீடுகட்டும் பணியை மீண்டும் தொடருவீர்கள். சிலர் புதிய வீட்டிற்கு குடி புகுவார்கள். கணவன் மனைவிக்கிடையில் திடீரென கருத்து வேற்றுமை உண்டாகலாம். வழக்குகளில் நல்ல தீர்ப்பு வரும். பெண்கள் மற்றவர்களிடம் கவனமாக பேசுவது கருத்து வேற்றுமை வராமல் தடுக்கும். புதிய மாற்றம் உருவாகும்.





தனுசுராசி அன்பர்களே! காரியங்களை சாதிக்கும் ஆற்றல் அதிகரிக்கும். நீண்ட தூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வரும். கூர்மையான மதி நுட்பத்தால் எந்த பிரச்னையையும் எளிதாக தீர்த்து விடுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து விடுவீர்கள். புதிய வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு சாதகமான பலன்தரும். குடும்பத்தில் கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபங்கள் நீங்கி ஒற்றுமை உண்டாகும். பெண்களது ஆலோசனை கேட்டு குடும்பத்தில் இருப்பவர்கள் செயல்படுவர்.




மகரராசி அன்பர்களே! நல்ல செயல்கள் நடக்கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். எதிர்பார்த்த பணவரவு உண்டு. உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். எதிர்பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணி சுமை குறைந்து காணப்படுவர். வேலை திறமைக்கு பாராட்டு கிடைக்கும். குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம். பிள்ளைகளிடம் கவனமாக எதையும் எடுத்து சொல்வது நல்லது. பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னை தீரும். மாணவர்களுக்கு சக மாணவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் தெளிவான முடிவினை எடுப்பீர்கள். தந்தை மூலம் நன்மை உண்டாகும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவையான நிதி உதவியும் கிடைக்கலாம். உத்யோகஸ்தர்கள் தற்காலிக பதவி உயர்வு கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த மனகுழப்பங்கள் தீரும். எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். உறவினர் மூலம் நன்மை உண்டாகலாம். பெண்களுக்கு மனகுழப்பம் நீங்கி எதிலும் தெளிவான முடிவு எடுப்பர்.





மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும், புதிய ஆர்டர்கள் பெறுவதற்கான தடைகள் நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்து கவலை உண்டாகலாம். பெண்களுக்கு வீண்செலவு குறையும். திறமையான செயல்கள் மூலம் எடுத்த காரியம் சாதகமாக நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றத்திற்கு இருந்த முட்டுக் கட்டைகள் விலகும்.


## எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!

## ஈழநாடு 29வது ஆண்டு விழா

## சங்கீத சங்கமம் 2022

## 16 ஏப்ரல் 2022 சனிக்கிழமை



# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்



Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

1.0% முதல் 1.5% வரை

அதிரடி சிறப்பு வட்டி வீதம்

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்

இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்

உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034

416-994-3861



Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE


## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com














# தைப்பூச திருவிழா அழைப்பிதழ்



பவுர்ணமி 18 ஜனவரி 2022 செவ்வாய்க்கிழமை தைப்பூசத்தை முன்னிட்டு சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களுக்கு 1000 நபர்களுக்கு வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலம் அனைவரும் சாப்பிட வாருங்கள் தர்மத்தினை நீங்கள் காப்பாற்றுங்கள் தர்மம் உங்களை காப்பாற்றும் 1000 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ரூபாய் 50000 ஆகின்றது.

இவ்வேளை தங்களால் முடிந்த நன்கொடைகளை செலுத்தி இந்த தர்மத்தின் சிறந்த பலன் களை அடைய அன்போடு அழைகின்றோம்.

நன்கொடைகளை செலுத்த வேண்டிய முகவரி — சி.நவதாண்டவதீக்ஷிதர் .22/10, கிழக்கு சன்னதி சிதம்பரம். 608001,9345512976. gookulpay omganesh.

THIRUCHITRAMBALAM ANNADHANA TRUST STATE BANK OF INDIA CHIDAMBARAM. BRANCH A/C.NO 30263863248.IFSC.SBIN0000823.. MO-DD-CHEK இந்த வழியாகவும் அனுப்பலாம். உடன் ரசீது பிரசாதங்கள் முறையாக அனுப்பி வைக்கப்படும்.

நன்றி — சி.நவதாண்டவதீக்ஷிதர்.

